1408

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 3.

13 MAR 1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௪ | பிரமோதூத ஆண்டு பங்குனித் திங்கள்<br>1931 ௵ மார்ச்சு௴ | இதழ் ௩ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

ஒரு விநோத சம்பாஷணை ... ... ௭௩
சிவஞானபோத விளக்கம் ... ... ... ௭௯
ஊத்துக்குடி விழாத் தலைமைப் பேருரை... ... ௮௧
மூன்று கேள்விகட்கு முடிந்த விடை ... ... ௮௭
ஐந்தொழில் குறிக்கும் அபய திருக்கரம் ... ... ௯0
மாணிக்கவாசக சுவாமிகள் காலம் ... ... ௯௪
தென்புலத்தார் ... ... ௯௬

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# சமாஜப் பொதுக் கூட்டங்கள்

1. 1931௵ பிப்ரவரி௴ 7௳ சனிக்கிழமை மாலை 5½-மணிக்கு இராயப்பேட்டை "குகாநந்த நிலையத்தில்" திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் தலைமையில் சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் "பெரியபுராணம்" என்பதுபற்றிச் செந்தமிழ்ச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்கள். பெரியபுராணத்திலேயே சீவகசிந்தாமணியை இகழ்ந்து கூறும் வாக்குக் காணப்படாமையாலும், சேக்கிழார் புராணம் உமாபதி சிவத்தின் வாக்கென்பதற்குப் போதிய சான்றின்மையாலும், "பெரிய புராணம்" சிந்தாமணியில் அரசன் கொண்டிருந்த பிரேமையை மாற்றுவதற்காக எழுந்த நூல் என்று கூறுவதற்குப் போதிய சான்றில்லையென்ற முடிபு இழுக்காகாதென்றும், கவிநயத்திலும் சொற் செல்வத்திலும் பெரியபுராணம் கம்பராமாயணத்துக்கு ஒரு சிறிதும் பின் வாங்கிய நூலல்லவென்றும் பல உதாரணங்களோடு சொற்பொழிவாளர் விளக்கினர். பிறகு திரு. கே. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "அப்பரும் அவரது அருண்மொழியும்" என்பதுபற்றி அப்பர் சரிதத்தின் முக்கிய பகுதிகளையும் அவற்றிற்கு அப்பர் தேவாரத்திலேயே காணப்படும் அகச் சான்றுகளையும் விளக்கி, "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற தேவாரத்தின் சிறந்த உட்கிடையை வற்புறுத்தி அப்பர் வாக்கைப் பின்பற்றி நாம் செய்யவேண்டுவதென்ன என்பதைத் தெளிவாகக் கூறி விரிவுரை யொன்றை நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் இவ்விரிவுரைகளைப் பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். சேக்கிழார் புராண ஆசிரியர் யார், சிந்தாமணிக்குப் போட்டியாகப் பெரியபுராணம் தோன்றியதா என்ற பொருள்கள்பற்றித் தமது கருத்து, சொற்பொழிவாளர் கருத்துக்கு மாறுபட்டிருப்பதை விளக்கினார்கள். இறுதியில் தலைவருக்கும் சொற்பொழிவாளர்கட்கும் நன்றி கூறியபின்னர் கடவுள் வாழ்த்தோடு சபை கலைந்தது.

2. 1931௵ பிப்ரவரி௴ 15௳ ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி முதல் 11 மணிவரை திருமயிலாப்பூர் கபாலீச்சரத்தில், திரு. வி. உலகநாத முதலியார் அவர்களால் சிவராத்திரியின் மகிமையும், கண்ணப்ப நாயனார் சரித்திரமும் பிரசங்கம் செய்யப்பட்டன. அன்றிரவு சிவராத்திரி யாகையால் கால பூசைகளைத் தரிசிப்பதற்கும் கண் விழிப்பதற்குமாக மக்கள் திரண்டுவந்தனர். திரு. முதலியார் அவர்கள் சிவராத்திரி உண்டான விதத்தையும், சிவராத்திரி பேதங்களையும், சிவராத்திரி விரதத்தின் பலனையும் முதலில் விளக்கிப் பிறகு கண்ணப்ப நாயனார் திவ்விய சரித்திரத்தையும் அதிலுள்ள பல நுட்பங்களையும், நாயனார் சரித்திரத்தில் தற்காலத்தவர் கூறும் சில அசந்தர்ப்பங்களையும் அவைகளுக்குத் தக்க விடைகளையும் மிகச் செவ்வையாக அறிவுக்குப் பொருத்தமான வகையில் எடுத்துரைத்தார்கள். காரியதரிசியால் வந்தனை, கடவுள் வாழ்த்து கூறப்பட்ட பின்னர் கூட்டம் முடிந்தது.

---

## வாழ்த்துப்பா

மெய்வைத்த ஞானவிளக்கமும் மேன்மையும் மேவியொளிர்
சைவசித்தாந்த சமாஜந் தழைத்தித் தரணிதனிற்
பொய்வைத்த நாத்திகப் புல்லறிவாளர் தம்புன்மைதவிர்த்
துய்வைத்தரச் செயுமென்றே அரனடியுள் குவனே.

தெய்வத்தின் மேலாஞ் சிவனடி வாழி
உய்நெறி காட்டும் நல்லுத்தமர் வாழி
சைவம் பெருக்கும் சமயமும் வாழி
சைவ சித்தாந்த சமாஜமும் வாழியே.

நா. கரு. நா. நாராயணன் செட்டியார், நாட்டரசன் கோட்டை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ௪ | பிரமோதூத ஆண்டு பங்குனித் திங்கள் 1931 ௵ மார்ச்சு ௴ | இதழ் ௩ |
|---|---|---|

## ஒரு விநோத சம்பாஷணை

[பத்திராசிரியர்]

சென்னைக் கடற்கரையில் ஞானப்பிரகாசம் என்ற கிறிஸ்தவ சகோதரனுக்கும் அவனது நண்பன் மாணிக்கவாசகம் என்ற ஹிந்து மாணவனுக்கும் நடந்த விநோத சம்பாஷணையொன்றை ஈண்டு வெளியிடுகிறோம்.

ஞா:—குளிர்ந்த காற்று நன்றாக வீசுகின்றது. உடல் நல்ல இன்பத்தையனுபவிக்கிறது. இந்த வேளையில் உயிருக்கு இன்பம் தரக்கூடிய நல்ல விஷயமாக ஏதாவது சொல்லப்பா, மாணிக்கம், கேட்கலாம்.

மா:—எதைப்பற்றிச் சொல்லவிரும்புகிறாய். கிறிஸ்து நாதர் சரித்திரத்தில் ஏதாவது சொல்லவா, பைபில் நூலிலிருந்து ஏதாவது ஒரு கருத்தை இருவருமாகச் சேர்ந்து ஆராய்ந்து இன்புறலாமா, இல்லாவிட்டால் தேவாரம், திருவாசகத்திலிருந்து ஏதாவது நான் சொல்லட்டுமா?

ஞா:—எங்கள் காலேஜில் பைபில் சொல்லித் தருகிறார்கள். தேவாரம், திருவாசகம்என்றாயே அதில் ஏதாவது சொல். போப்பையர் திருவாசகத்தை இங்கிலீஷில் மொழி பெயர்த்திருக்கிறாரே, நீ அதைப் படித்ததுண்டா?

மா:—இல்லை. தமிழில் ஏதோகொஞ்சம் நான் படித்திருக்கிறபடியால் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு எனக்குத் தேவையில்லை.

ஞா:—நல்லது. நான்தான் சர்வகலாசாலையில் பழைய விதிகளின்படி தமிழ் படிக்காமலே தப்பித்துக்கொண்டேன். நீதான், தமிழ்படித்திருக்கிறாயே ஏதாவது ஒரு நல்லபாட்டுக்கு அர்த்தம் சொல் கேட்போம்.

**மா:**—நான் பி. ஏ. சீனியர் வகுப்பில் படிக்கிறேன். என்றாலும் திருவாசகத்தில் ஒரு பாட்டுக்கு அர்த்தம்சொல்லக் கூடிய சக்தி எனக்கு வரவில்லை. ஆனால், சென்னையில் பல பெரியார்களின் சொற்பொழிவுகளை யெல்லாம் தவறாமல் நான்கேட்டிருப்பதால் கூடிய மட்டில் நல்ல விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு நோட்புத்தகத்தில் எழுதி வைத்துக்கொண்டு பிறகு சாவகாசமாகத் தனிமையிலிருந்து யோசனை செய்வேன். திருவாசகத்தில் உனக்கு எது நல்ல பாட்டென்று தோன்றுகிறது ?

**ஞா:**—நான் அதிகமாகத் திருவாசகம் படித்ததில்லை. என்னுடைய வீட்டுக் கெதிரில் எங்கள் உபதேசியார் இருக்கிறார். அவர் நிரம்பவும் நல்ல மாதிரி. பைபில் படிப்பதோடு கூட திருவாசகம், தாயுமானவர், திருவருட்பா முதலிய புத்தகங்களையும் படித்துக் கொண்டே யிருக்கிறார். அவர் என்னிடம் அடிக்கடி திருவாசகத்தில் ஒரு பாட்டைப்பற்றி மட்டும் சொல்வதுண்டு. குழந்தைக்குத் தாய் பால் கொடுப்பது போலக் கடவுள் நமக்கு உபகாரம் செய்கிறார் என்று ஒரு பாட்டிருக்குமே, அது உனக்குத் தெரியுமா ?

**மா:**—நன்றாகத் தெரியும். நான் கிறிஸ்மஸ் விடுமுறையில் பச்சையப்பன் கலாசாலையில் நடந்த சைவசித்தாந்த மகாசமாஜவிழாவில் ஒரு நாள் போயிருந்தேன். அங்கே தலைவராக விளங்கிய பண்டிதமணி - மு - கதிரேசச் செட்டியாரவர்கள் அந்தப் பாட்டைச் சொல்லி அதற்கு மிகச் சுருக்கமாக அர்த்தமும் சொன்னார்களென்று உனக்குத் தெரிவித்தேனே, ஞாபகமில்லையா ? என்னுடைய நோட்புத்தகத்தில் குறித்து வைத்திருக்கிறேன். வீட்டுக்குப்போய் அந்தப் பாட்டைப் பற்றிச் சிந்தித்தேன்.

**ஞா:**—என்ன சிந்தித்தாய் ?

**மா:**—செட்டியாரவர்கள் கூறியசில குறிப்புக்களை உதவியாகக் கொண்டு நான் யோசிக்கும் போது ஒவ்வொரு சொல்லிலும் அழகான சுவையுள்ள நல்ல பொருள் அமைந்திருக்கக் கண்டேன்.

**ஞா:**—அப்படியா, எங்கே சொல் பார்ப்போம்.முதலில் அந்தப் பாட்டை உனது இனிய குரலில் பாடிக்காட்டு.

**மா:**—(பாடுகிறான்.)

“ பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆநந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்
எங் கெழுந்தருளுவ தினியே ” [தேன்

**ஞா:**—ஆ ! ஆ ! மிக உருக்கமாகவும் நன்றாகவும் பாடினாய். இந்தப் பாட்டின் பொருளழகைக் கொஞ்சம் சொல்கேட்போம்.

**மா:**—இந்தப்பாட்டின் அடிப்படையான கருத்து கடவுள் தாயைவிட மிகவும் இரக்கமும் பரிவும் உடையவர் என்பது. இதை இந்தப் பாட்டின் ஒவ்வொரு சொல்லிலும் காணலாம். அது தான் திருவாசகத்தின் பெருமை.

**ஞா:**—அதெப்படி முடியும் ? உண்மையாகவா ? சொல், பார்க்கலாம் !

**மா:**—தாய் ஊட்டுவது பால். கடவுள் சொரிவது தேன் ; உலப்பிலா ஆனந்தமாய தேன். பாலைவிடத் தேன்



இனியது. சில நோய்கட்குப் பால் ஆகாதபோதிலும் தேன் ஆகும்.

**ஞா:**—தெரிந்தது. இரண்டாவது சொல்லைப்பற்றிக் கூறு.

**மா:**—தாய் வேளைக்குவேளை நினைந் தூட்டுகிறாள். இறைவன் இடைவிடாது தனது கருணை வெள்ளத்தைப் பொழிகிறான். நினைந்து ஊட்டுவதை விட இடைவிடாது பொழிவது பெரியதொரு செயல்.

**ஞா:**—விளங்கிற்று - மேலே செல்.

**மா:**—‘தாயினும் சாலப்பரிந்து’ என்பதை நோக்குக. “ எத்தன்மை குற்ற மியற்றிடினும் தாய் பொறுக்கும்” என்ற வாக்கு ஞாபக மிருக்கிறதா ? அத்தகைய தாயைவிடச் சிறந்த பரிவுடையவர் கடவுள்.

**ஞா:**—ஞாபக மிருக்கிறது. தாயுமானவர் பராபரக்கண்ணியில் வருகிறது. விளங்கிற்று. மேலே சொல்வாயாக.

**மா:**—பாவியேனுடைய - தாய் கள்ளம் கபடறியாக் குழந்தைப் பருவத்தில் தன் மகவுக்குப் பால் நினைந்தூட்டுகிறாள். இறைவன் எத்தனை கள்ளம் கபடு வஞ்சனையுடைய உயிராயினும் அதற்கும் கருணைகூர்ந்து மல மறுக்கும் உபாயத்தை உதவுகிறான். கடவுள் கருணைக்குப் பாவி யென்றும் புண்ணியனென்றும் பேத வுணர்ச்சியில்லை. அவ்வவ்வுயிருக்கேற்ற போகத்தைத்தரும்.

**ஞா:**—உன் கொள்கையை விடாது சாதுரியமாக அர்த்தம் செய்தாய். சபாஷ்-மேலும் கூறுவாய் நண்பனே !

**மா:**—ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி - தாய் ஊட்டும் பால் ஊனினைப் பெருக்கிப்புறவொளி பெருக்கும். அதாவது உடலைப் பருக்கவும் ஒளி பெறவும் செய்யும். ஆனால் கடவுளின் கருணை, ஊனினைக் குறைத்து உள்ளொளியாகிய ஞானப் பிரகாசத்தை யதிகரிக்கச் செய்யும்.

**ஞா:**—என் பெயரைத்தான் உள்ளொளி யென்று திருவாசகம் கூறுகிறதோ ! சந்தோஷம். நீ சொல்வதெல்லாம்நன்றாயிருக்கிறதே! மேற்கொண்டு என்னென்ன சொல்லப்போகிறாயோ, பார்க்கலாம். உம். நடக்கட்டும்.

**மா:**—உலப்பிலா ஆநந்தமாய தேனினைச் சொரிந்து-தாய்ப்பால் அளவுக்கு மிஞ்சினால் தெவிட்டும் ; நோயுற்றிருந்தால் குழந்தைக்குத் துன்பமாகவுந் தோன்றும். கடவுளின் கருணை தெவிட்டாத ஆநந்தமாகவே என்றுமிருக்கும். ஊட்டும் × சொரிந்து என்பதையும் பால் × தேன் என்பதையும் முன்னரே தெரிவித்தேன்.

**ஞா:**—ஆம் ! ஆம் - நீசொல்வதெல்லாம் உலப்பிலா ஆநந்தமாகவே யிருக்கின்றது.

**மா:**—புறம் புறந்திரிந்த - தாய்குழந்தைக்குப் பாலூட்டித் தொட்டிலிலிட்டுத் தன்சமையல் வேலைக்குச் செல்கிறாள். கடவுளோ சிவாநந்தத்தை நல்கி அப்பொக்கிஷத்தைப் பெற்றவுயிர் ஐம்புலவேடர் பாற்பட்டு அதை இழக்க நேரிடா வண்ணம் புறம் புறந்திரிந்து சுற்றிச் சுற்றிக் காவலிருந்து உயிரின் செயலைத் தஞ் செயலாகவே கொண்டு பாதுகாக்கிறார்.

**ஞா:**— இது உங்கள் சைவக் கொள்கைபோலும்-நன்றாகத்தானிருக்கிறது. எங்கள் கிறிஸ்தவத்தில் இவ்வளவு அதிகமாகக் கடவுள் கருணையைப்பற்றிச் சொல்வதில்லை.

182152

மா :—செல்வமே சிவபெருமானே-புறம் புறந்திரிந்து காவலிருப்பவர்களெல்லாம் வறுமையுற்ற வேலைக்காரர்களாகவே யிருப்பர். ஆனால் கடவுள் செல்வத்துக்கெல்லாம் செல்வமாகவும் மங்களம் நிறைந்த சிவனாகவும் ஆற்றல் மிக்க பூரண சுதந்திரனான பெருமானாகவுமிருக்கிறார்.

ஞா :—நன்றாயிருக்கிறது. கடைசியடியின் பொருளென்ன ?

மா :—யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே - குழந்தை தாயைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்துக்கொண்டால் சிறிதுநேரம் விளையாடிவிட்டு ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு குழந்தையைவிட்டுவிட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கத் தாய் சென்றுவிடுவாள். கடவுளோ அப்படியல்ல. குரங்குக் குட்டி தன் தாயைச் சிக்கெனப் பிடித்துக்கொள்வது போலத் தம்மைப் பிடித்துக்கொள்ளும் உயிரைத் தன் குட்டியைத் தளரவிடாது வாயிற் கவ்விச் செல்லும் பூனையைப்போல் கடவுள் பிடித்து ஆட்கொண்டு காப்பாற்றுகிறார்.

ஞா :—நன்றாகச் சொன்னாய். மர்க்கட நியாயம், மார்ஜ்ஜால நியாயம் என்று ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் வித்தியாசங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்களே, அந்த இரண்டையும் ஒன்று சேர்த்து அழகாகச்சொல்லிவிட்டாயே, அப்பா, மாணிக்கம், நாழிகையாய்விட்டது. இன்றுமாலை நல்லபொழுதாய்க் கழிந்தது. உனக்கு நிரம்பவும் வந்தனம். வா, போகலாம்.

மா :—எனக்கு வந்தனம் சொல்லாதே. பண்டிதமணி செட்டியார் அவர்களுக்கே இந்த வந்தனம் உரியது. அவர்கள் "சித்தாந்தம்" பத்திரிகையில் தொடர்ச்சியாகத் "திருவாசகத்தில் ஆயிரம் மணிவாசகங்கள்" என்று எழுதப்போகிறார்கள்.

ஞா :—அப்படியா, ஆனால் நாம் இருவரும் "சித்தாந்தம்" பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விடலாம். வா, போகலாம்.

மா :—நன்றாகச் சொன்னாய். உனக்கிருக்கும் உணர்ச்சிகூட எனது சைவ சகோதரர்களுக் கில்லையே ?

ஞா :—நான் உன்னுடன் வந்துஉண்டாக்குகிறேன். வா, போகலாம். (இருவரும் போகிறார்கள்.)

---

# சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

## ஆறாஞ் சூத்திரம்

இலக்கண வியலில் கடைசி சூத்திரமாகிய இச் சூத்திரம் பதிக்கு இலக்கணங் கூறுவான்தொடங்கி, சத்து இது, அசத்து இது என்று அளவு செய்து உணர்த்துவதாயிற்று. ஏனெனின், மேல் ஐந்து சூத்திரங்களாலுஞ் சொல்லிய பதிபசுபாசமாகிய பொருள்களுள் எது சத்து, எது அசத்து என்னும் ஐயத்தினை நீக்குவதற்குச் சத்தினியல்பு இது, அசத்தினியல்பு இது என்று அவ்விரண்டு பொருள்களும் இலக்கணத்தால் தம்முள் மயங்காதவிதம் அளவுசெய்து உணர்த்துவதுடன், இனிவரும் உண்மை யதிகாரத்திற்கும் தோற்றுவாய் செய்யும் நிமித்தமாகக் கூற வேண்டுவதாதலால்,

> உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
> னிருதிற னல்லது சிவசத்தா மென
> விரண்டு வகையி னிசைக்கு மன்னுலகே.

என்றனர்.

(இ-ள்.) உணர்உருஎனின் அசத்து - தம் உணர்வின் தமியாகிய முதற்பொருள், காண்டல் கருதல் உரையென்னும் அளவைகளால் அறியப்படுவதுஒன்றாயின்சுட்டியறிந்துகாணப்படும் உலகம்போல் அழிபொருளாகிய அசத்து ஆகும்; உணராது எனின் இன்மையின் - எவ்விதத்தாலும் அறியக்கூடாத இயல்புடையது என்று கூறின், உலகத்து அறியப் படாத முயற் கொம்புபோல் சூனியப் பொருளாகும்; (ஆதலால்) இருதிறன் அல்லது - இவ்விரண்டு பகுதியும் அல்லாமல்; சிவசத்தாம் என இரண்டு வகையின் - ஒருவிதத்தால் அறியப்படாமையும், ஒருவிதத்தால் அறியப்படுதலும் ஆகிய இரண்டு வகையானும் அறியப்படுமென்று; மன்னுலகு இசைக்கும் - மெய்யுணர்வின்நிலைபெற்ற உயர்ந்தோர் கூறுவர்.

பாசஞானம் பசுஞானம் பதிஞானம் என்று பிரிக்கப்படும் மூன்றனுள் பாசஞான பசுஞானங்களால் அறியப்படாமைபற்றி ஒருவாற்றான் அறியப்படாதது என்றனர். பிறகுபதிஞானத்தால் அறியப்படுவது ஒன்றாதலால்ஒருவாற்றான் அறியப்படுவது என்றனர். அறியப்படாத காலத்துச் சிவமாதலும், அறியப்படுங் காலத்துச் சத்தாதலும் பெறப்படுவது பதிப்பொருள் என்று கூறுவார், 'இரண்டுவகையில் சிவசத்தாமென இசைக்கும்' என்றனர். இதனால் இறைவன் இலக்கணம்சித்தாதலும் சத்தாதலும் என்று கூறியதாயிற்று.

இது கேட்ட வாதியொருவன் உலகம்போல முதல்வனும் அளந்து அறிகின்ற பொருள் ஒன்றேயாகும். மேல் சூத்திரத்தில் அளந்து அறிந்து அறியா என்னும் வாதத்தை யாம் ஒப்போம் என்று கூறலும், வாதியே! சுட்டறிவினால்அறியப்பட்டசுட்டுப்பொருளெல்லாம் அசத்துப் பொருள் என்பதை யறியாய். ஏனெனின், அவ்விதம் சுட்டி யறியக்கூடிய பொருள்கள் இராசத குணமிகுதியினால் பிரகாசமாய்த் தோன்றித் தாமத குணமிகுதியினால் அப்பிரகாசமாய் நிற்றலால் அளவை யறிவினால் அறியப்பட்ட பொருள்களெல்லாம் அசத்தேயாகும் என்றனர்.

அது கேட்ட வாதியானவன் உள்ளதென்று அறியும் அறிவிற்கு விடயமாய பொருள்களெல்லாம் அவ்விதம் அசத்தாகும் என்பதற்குப் பிரமாணம் என்னை என்னலும்,

> "அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
> மசத்தாகு மெய் கண்டானாயின்"

என்று அருளினர். இதன் பொருளாவது, அசத்தினியல்பு இது வென்றறியாத அறிவிலாதவனே ! யாம் கூறும் விடையை மனத்தினிடத்தே ஊன்றிக் கேட்பாயாக ! சத்தினியல்பு இது வென்று அதன் தன்மை யறிந்தோன் ஆராயப் புகுவானாயின், சுட்டறிவினால் அறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாகும், என்பதாம். அது கேட்ட வாதியானவன், இவ்விதந் தோன்றி மறைவனவாய உலகம் அசத்

தாகும் விதத்திற்கு ஓர் உவமை கூறுதலாகுமோ என்னலும்,

‘ * * * * அசத்தலாய்
நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றாமாறெருப்பு ’’

என்றருளினர். இதன் பொருளாவது, அசற்காரிய வாதியாக அல்லாத சற்காரிய வாதியென்னும் அறிவுடையோனே! அவ்விதம் தோன்றி மறையும் உலகம் அசத்தாகும் விதத்திற்கு உவமை ஆராயின், உலகத்துக் காட்சியளவையாகக் காணப்படுகின்ற நீரினிடத்தே தோன்றும் எழுத்தும், கனவினிடத்தே காணப்படும் காட்சியும், பேய்த்தேர் என்கின்ற கானல் நீரும் ஆம் என்பதாம். தோன்றியபோதே மறைந்துபோதற்கு நீரினையும், முடிவு பெறுதலில்லாது நடுவே மறைந்து போதற்குக் கனவினையும், ஒரு காரணத்தால் தோன்றி மறைந்து போதற்கு அரிய காட்டில் முதுவேனிற்காலத்து நடுப்பகலில் சூரியனின் கடுமைபற்றித்தோன்றி அவன் மேகத்தினிடத்தே மறைந்தவிடத்துதானும் மறைந்து போவதாகிய பேய்த்தேரினையும் காட்டினர்.

இவ்விதம் உணர்கின்ற பொருளினது இயற்கையையும் உணராதபொருளின் இயற்கையையும் சொல்லுகின்ற காலத்து அசத்தின் தகுதியை அளவு செய்து உணர்த்தியவிடத்து, வாதியானவன், இவ்விதம் இரண்டு பொருளின் தகுதியும் இருத்தலால் இவற்றிற்கு வேறாகிய முதல்வனது இயல்பாவது எது? என்றலும், அதற்குப் பதிலாக இவ்விரண்டு தன்மையுமில்லாது வாக்குமனமென்ற இரண்டற்கும் அப்புறப்பட்டதாய் நின்றது எதுவோ அதுவே சத்தாயுள்ள சிவமாகும் என்றனர். அது கேட்ட வாதி இவ்விதம் இரண்டுமில்லாத பொருள் ஒன்று உள்ளது என்பதற்குப் பிரமாணம் யாது என்றலும்,

“ எண்ணிய சத்தன் றசத்தன்றா மென்றா
[லென்
கண்ணியுள தென்றன் மெய்கண்டா—
[னெண்ணி
யறியவிரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்றா ளாம்.”

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, பரமார்த்தமாகிய பரம்பொருள் விவகார திசையில் எண்ணப்பட்ட சத்துமல்லை; அசத்துமல்லை என்று கூறின், அவ்விதம் ஒரு பொருள் உண்டென்று கூறுதல் எவ்வித பிரமாணங் கருதியோ? அதனைக் கூறுவாயாக. பிரமாணம்உண்டெனின் அதற்கு அது பிரமேயம் என்று கூறப்பட்டு ஞேயமாதல் செல்லும் என்று பயந்து பிரமாணமில்லை என்று கூறுவதாயின், சத்தின் இயற்கையினையுணர்ந்தோன் ஆராய்ந்து அறியுமிடத்துக் காட்சி முதலிய பிரமாணங்கட்கு விடயமாவதும் ஒருவிதத்தாலும் பிரமாணமல்லாத சூனியமாகிய இரண்டும் மேற்கூறிய விதத்தால் அசத்தேயாகும். ஆகையால் சாந்தோக்கியம் முதலியவற்றுள் சத்து என்று கூறப்படும் சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் சைவ உபநிடதங்களிலும், சைவ ஆகமங்களிலும், அந்நியமாய் இல்லாது உணருகின்ற அநுபவமாத்திரையில் உபசரிப்பதென்று கூறப்படும் சிவன் அருளாவது அல்லாமல் நீ சொல்லுகின்ற சூனியமில்லையென்பதாம்.

அதாவது சத்து என்று ஓதப்படும் பரப்பிரம்மப் பொருளாவது உண்மை ஞானத்தில் கோசரிப்பதென யாம்



சொல்லும் சிவமேயல்லாது நீ சொல்லுகின்ற சூனியமில்லை என்று மாயாவாதியை மறுத்ததாயிற்று.

இனி இன்னுஞ் சில வாதிகள், ஏதேனும் ஒரு பொருள் பிரகாசிக்குமாயின் அவ்விதம் பிரகாசித்த பொருளையும் ஈதென வேறோர் வழியால் அறிவோமென்று அவா செல்லுமிடத்து, அவ்விடத்தும் புதுவதாய்ப் பிரகாசிக்க வேண்டுவது ஒன்று உள்ளதாதலால், பிரகாசத்தினுக்குப்பிரகாசிக்கவேண்டுவதில்லை என்று கூறல் எவ்விடத்துஞ் செல்லாதாதலால், வாக்கு மனாதீதம் என்றது பொருந்தாததாகும் என்னலும், வாக்கு மனாதீதம் என்றதை வலியுறுத்துவார்,

“ உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்
[றை
யுணரு நீதானுணராயாயி னுணருமுனிற்
றானிரண்டா மெய்கண்டான் றன்னாலுணர்த
றானிரண்டாய்க் காணான் றமி.” [லாற்

என்னுஞ் செய்யுளைக் கூறினர். இதன் பொருளாவது, உன்னால் அறியக்கூடியவாய கருவிகளெல்லாம் மேற்கூறியபடி அசத்தாகும். ஆதலால்அவற்றுள் ஒரு கருவியும் ஒன்றாகிய முதற்பொருளையறிய மாட்டாது, அக்கருவிகளால் அறிந்து வருகின்ற நீதானும் அதனையறியமாட்டாய். நீயே ஆய்ந்து அறிவாயாயின் அவ்வாறு உணரப்படும் பொருள்கள்போல் உணர்கின்ற உன்னின்வேறாகும். உயிர்க்கு அறிவுவிளங்கும் உண்மையையறிந்தோன் தன்னறிவு அச் சிவனறிவில் அடங்கி அதுவாய் நின்று அதனாலே அதனை யறியுமாதலால், அத்தனிமுதற் பொருளை ஏனைப் பொருள்களை யறியுமாறுபோல வேறாய் நின்று அறிவானல்லன்.இதன் கருத்தாவது, சத்தாகிய சிவத்தினைப் பாச ஞானத்தாலோ, பசு ஞானத்தாலோ அறிதல் கூடாது. அவ்விதம் அறிவது கூடுமெனில் குடம் முதலாயின போல உயிருக்கு வேறாய் அவிச்சையினால் வரும் சுக துக்கங்களைக் கொடுப்பதல்லாமல் அவிச்சையில் நீங்கிய நிரதிசய இன்பத்தைக் கொடாது ஆதலால் அவ்வுண்மையினை யுணர்ந்த ஒருவன் ஏனைய பொருள்கள் போல் அசத்தாதலில்லாமல் அத்தனி முதற் பொருளை அதனால் ஒத்திட்டு நின்று காண்பன் என நையாயிகர் முதலியோரை மறுத்து, வாக்குமனாதீதமாய் நின்றே கோசரமாம் எனக் கூறியவாறாயிற்று. இது கேட்ட யோக மதவாதி, வாக்கு மனாதீதப்பொருள் யோக நூல்களில் சொல்லும் தியான பாவனைகளில் கோசரமாமென்று கூறுதலே பொருத்தமுடையதாகும் என்று கூறலும்,

“பாவகமேற் றானசத்தாம் பாவனா தீதமெனி
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம் [ற்
—பாவகத்தைப்
பாவித்த றானென்னிற் பாவகமாந் தன்னரு
பாவிப்பது பாமில் பாழ்.” [ளால்

என்று கூறினர். இதன் பொருளாவது, ஓ யோகமதவாதியே! நீ கூறும் பாவனையானது மற்றைப் பாவகங்கள்போல் மனம் முதலியவைகளோடு கூடிப் பாவிக்கும் பாவகமென்றால் அறிவினால் அறியப்பட்ட சுட்டு ஆதலால், அப்பொருள் அசத்தாகும். கருவிகளை நீங்கிப் பாவிப்பது ஆதலால் அப்பாவனையைக் கடந்தது என்று கூறில் கருவிகள் நீங்கியவிடத்து ஒன்றையும் அறிவதற்கில்லாது கேவலமாக ஆகுமாதலால் அது பாவகமாத்திரையே யல்லாமல் பயன்படுவதற்கு இல்லை. இவ்விரண்டு விதமும் இல்லாமல் அநிருவசனமாகப் பாவிக்கப்படுவது என்று

கூறில் சூனியப் பொருளாகும். அவ்வாறு அல்லாமல் பாவனைக்கு எய்தாத பொருளைஎய்தியதாக வைத்துப் பாவகஞ் செய்தலென்று கூறின் அது போலிப் பாவகமாகுமாதலால், பாவனாதீதம்போல பாவனைமாத்திரையே யல்லாது பயன்படுவதற்கு இல்லை.அவ்விதமின்றேல் ஒரு விதத்தாலும் பாவனைக்கு எட்டாத பொருள் பாழாமென்று கூறில் அப்பாவகங்களை யொழித்துத் தன்னுடைய திருவருளால் பாவிக்கப்படுவது ஆகும் பரம்பொருள். ஆதலால் நீ கூறும் பாவனைக்கு எய்தாமை பற்றிப் பாழாதலில்லைஎன்பதாம். அது கேட்ட சிவசமவாதிகள் அவ்விதம் பாவனைக்கு எட்டாத பொருள் ஒன்றினை அவனருளால் பாவித்தல் வேண்டாம். உயிர்கள் பசுத்துவம் நீங்கிய காலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்களும் உடையன என்று ஆகமங்களில் கூறுதலால் அவ்வித எண்குணங்கள் அடைந்த காலத்து ஆன்மாவின் ஞானமானது சிவஞானத்தோடு ஒப்பாவது அல்லாமல் பசுஞானம் என்று கூறப்படாமையால் அவ்வான்ம ஞானத்தால் அறியப்படும் கோசரப்பொருள் என்று கூறுதலே பொருத்தமாகுமென்னலும்,அவனருளாலல்லது கோசர மாகாமையினையெடுத்துக் காட்டுவார்,

"அறிய விரண்டல்ல ஞங்கறிவுதன்னு
லறியப்படா னறிவினுள்ளா-னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்
காட்டா தறிவறிந்து கண்டு." [யென்னக்

என்று கூறினர்.இதன் பொருளாவது, சிவாகமங்களில் அத்துவிதங் கூறுதலால் உயிர் தன் அறிவால் அறிதற்குத் தன்னைவிட்டு வேறு அல்லாதவனாதலாலும், சமமாக இருத்தற்கு இல்லாது தூலம் சூக்குமம் என்னும்முறையால் தன் அறிவுக்கு உள்ளேயும் நிற்றலால் அவ்விடத்துத் தன்னறிவினால் அறிய வாரானாதலாலும், தன் அறிவுக்கு வியஞ்சகமாய் நின்று அறிவிக்கும்உயிர்க்குயிராகிய முதல்வனை ஆன்மஞானமானதுதான் கண்டு அறிந்து தன் குணியாகிய உயிர்க்குக் கோசரமாகும்விதங் காட்டமாட்டாது. தன்னின் வேறு இல்லாது தனக்குள் நிற்றலால் தன்னால் காணப்படாது. எதுபோலென்னின், தனக்குக் காட்டுவதற்கு முதலாக நிற்கின்ற உயிரையறியமாட்டாத கண்ணொளி போல் என்பதாம். இது கேட்ட சிவாத்துவித சைவர் சுத்தசைவர் முதலாயினோர் அத்தன்மையனாகியமுதல்வனைத்தலைப்பட்ட உயிர் அம்முதல்வனோடு ஒன்றாய்ப் போதலே அல்லது, அவ்விதம் அறிவதும் அறியப்படுவதும் ஆவது எவ்விதம்? என்னலும், ஒன்றாயவிடத்தும் அறிவதும் அறியப் படுவதும் உண்டு என்பதை யுணர்த்துவார்,

"அதுவென்னு மொன்றன் றதுவன்றி வே
யதுவென் றறியறிவு முண்டோ வது [றே
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணிற்ற [வென்
லறியு மறிவே சிவமு மாம்''

என்று கூறினர். இதன் பொருளாவது ஓ வாதியே! சத்தாகிய சிவம் ஞேயப் பொருளாய், விசிட்டமாய் நிற்பது என்பதைநீயும் ஒத்துக்கொள்வதாகும். அவ்வித சிவம் இன்னதென்று அறிவதற்கு இல்லாது அநிர்வசனமாய் நிற்பதாகிய ஒரு நிருவிசேடப் பொருளென்று கொண்ட மாயாவாதிகளைப் போல அது என்று அநிர்வசனமாய்ச் சொல்லப் படுவதாகிய ஒரு சூனியமில்லை யாதலால் அந்த ஞேய மாத்திரையே யல்லாது அதற்கு வேறாக



வாக்கு மனாதீதமாய் நிற்பது ஒரு பொருள் என்று அறிகின்ற ஞாதாவும் ஆண்டு உள்ளதேயாகும். இவ்விதமல்லாவிடில் ஒன்றாதல் பெறப்படாது எனின், உலகத்துப் பொருள்போல் அது என்று சுட்டியறியும் விதம் முதல்வனானவன் தன்னில் வேறுஅல்லாதவனாய், நீரும் அதனோடு சேர்ந்த உப்பும்போல் தன் அறிவில் கலந்து வேற்றுமை காணப்படாது நிற்றலால் அறிவிறந்து அறிகின்ற அவ்வுயிர் சிவமேயாகும் என்பதாம். இவ்விதம் மேற்கூறிய வெண்பாக்கள் ஐந்தினாலும், வாக்குமனாதீதம் என்றல் பொருந்தும்; கோசரமா மென்றல் பொருந்தாது என்ற மாயாவாதிகளையும், கோசரமாமென்றல் பொருந்தும், வாக்குமனாதீதம் என்றல் பொருந்தாது என்ற நையாயிகர்களையும், பாவனைக்குக் கோசரமாமென்னும் பாதஞ்சலர்களையும், ஆன்ம ஞானத்திற்கே கோசரமாம் என்னும் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமே யல்லது உயிரென்று வேறு இல்லை ஆதலால் உயிர்க்குக் கோசரமாவது எவ்விதம் என்னும் சிவாத்துவித சைவரையும் மறுத்து வாக்குமனாதீத கோசரமாய் நிற்கும் இயல்பினை வலியுறுத்திக் கூறியவாறாயிற்று.

**ஆறாஞ் சூத்திரம் முடிந்தது.**

இலக்கண இயல் முற்றிற்று.

பொது இயல்பு முற்றுப்பெற்றது.

---

# தூத்துக்குடி விழாத் தலைமைப் பேருரை

[C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., F. M. U.]

[குறிப்பு:—சென்ற இதழில் குறித்தபடி தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ௪௭-வது ஆண்டுவிழாவின் அவைத்தலைவர் சைவத் திரு C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் முக்கிய பகுதிகளை ஈண்டு வெளியிடுகிறோம். —பத்திராசிரியர்.]

**அன்புடையீர்!**

இந்தப்பேரவைக்குத்தலைமை பூணும் அறிவாற்றல் இல்லாத என்னை அவ்வாறு செய்யும்படி ஆணையிட்ட உங்கள் அன்புக்கு மிக நன்றி செலுத்துகின்றேன். சென்ற எட்டாண்டுகளுக்குமுன்னரும்இவ்வாறேஇச்சபையின் ஆண்டு நிறைவு விழாவின் தலைவனாக நியமித்து உங்கள் அன்புநுகர்ந் தின்பமடையும் பேறு எனக்குத் தேடித் தந்தீர்கள். மீட்டும் இவ்வாண்டும் அவ்வாறே பணித்துள்ளீர்கள். நுங்கள் சபையினையும், அடியேனையும் அது முதல் இதுவரை அன்புகாரணமாகப் பிணைத்து நிலவ வைத்த இறைவன் பெருங்கருணையை வழுத்துகின்றேன்.

சைவம், சைவர், சைவ நூல்கள், சைவநூன் முடிபுகள் என்பவற்றைப் பற்றிச் சில வார்த்தைகள்மட்டும்பேசி என் முன்னுரையை முடித்துக்கொள்ள எண்ணியிருக்கின்றேன்.

சைவம்.—இதற்குச் சிவ சம்பந்தமானது அல்லது சிவனையே கடவுளாகக் கொண்டொழுகும்கொள்கைகளின் கூட்டம் என்றுபெரும்பான்மையாய்ப் பொருள் கொள்வர். ஆனால் உலகியல் வழக்கிலே வைத்துப்பார்த்தால் சில பெரும் பொருள்கள் கிடைக்கின்றன. ருமருவ் நடத்தும் மருட்டிய மிலிட்

டேரி ஓட்டலிலாவது ஞாயணனாபக்கருடைய தஞ்சாவூர் மிலிடேரி ஓட்டலிலாவது வெளிப்பலகையின் கீழ் ஒவ்வோர் நாள் "இன்றைக்குச் சைவ சாப்பாடு" என்று எழுதிய பலகை தொங்குமானால் அங்கேநின்ற 'சைவ' என்னும் அடைமொழி எத்தனை பொருள் தந்து நிற்கிறது காண்க. 'நாங்களும் இன்றைக்குச் சைவம்' என்றாவது அல்லது 'வெகுநாளாய்ச்சைவம்' என்றாவது 'பரம்பரையாய்ச் சைவம்' என்றாவது ஒருவன் சொன்னால் 'சைவம்' என்ற சொல் புலால் உண்ணாத ஒழுக்கம் என்பதையும், அவ்வொழுக்கமே சைவத்திற்கு அடிப்படை என்பதையும், சைவத்திற்கேயன்றி ஏனைச் சார்புகளுக்கு இது கிடையாதென்பதையும் இவை காட்டவில்லையா? புலாலுண்ணாத வைணவ, அல்லது கிறித்துவ, அல்லது மகம்மதிய நண்பர்கள் முறையே தங்களது புலாலுண்ணாத விரதத்தைக் காட்ட நான் வைணவன்-கிறித்தவன்-மகமதியன் என்று சொல்லக் காண்கின்றோமா? "கழிக்கரைமீன் கவர் வாரும்" என்று ஞான சம்பந்த சுவாமிகள் கட்டளையிட்டபடி புத்த மதத்தினர் புலால் உண்பதை விலக்காமல் ஒழுகுவதை நான் இலங்கைத் தீவில்நேரே கண்டேன். ஆகவே 'சைவம்' ஒன்று தவிர வேறெந்தச் சமயக் கொள்கையும் கொலை புலைதவிர்த்தலை அடிப்படையாகக் கொள்ளவில்லை. சைவம் கொலையைத் தவிர்ப்பது, புலாலை விலக்குவது என்பதாம். ஆனால் புலாலைத் தவிர்ப்பதெல்லாம் சைவமாய் விடுமோ எனின் ஆகாது. இது தர்க்க நியாயப்படிக்கும் தவறாகும். புலாலைத் தவிர்ப்பதுஎன்பது ஒரு பைசாவானால் சைவம் ஒரு ரூபா ஆகும். எனவே புலால் உண்ணாமை ஒருபைசாச் சைவமாம் என்றாற் பொருந்தும்.

இனிச் சைவத்திற்கு அடையாளம் ஏதாவது உண்டா? உண்டு. "சைவம் விட்டிட்ட சடைகளும்" என்றார் திருவிசைப்பா ஆசிரியர். தமக்கடங்காத அதிகன் என்ற பகைவனது மலையரணைத் தம் சேனைகள் தகர்த்துவென்று திறையாகக் கொணர்ந்த தலைக்குவியலிலே ஒருதலையில் ஒரு புன்சடைகண்டார் புகழ்ச் சோழநாயனார். உடனே

"தார்தாங்கிக் கடன் முடித்த
சடைதாங்கும் திருமுடியார்
நீர் தாங்கும் சடைப் பெருமான்
நெறிதாங் கண்டவானார்"

என்று அச்சடையினாலே அவர் அரனடியாராதலைத் துணிந்து அத்தலையினைப் பொற்கலத்தில் ஏந்தித் தீப்புகுந்து சிவபெருமானை அடைந்தார். எனவே சடைமுடி சைவ அடையாளமாயிற்று. திருநீறும் கண்டிகையும் வேணி முடியும் ஆகிய இவற்றையே தமது சைவ அரசாங்க அடையாளங்களாகக் கொண்டு அரசு செலுத்தியதால் மும்மையால் உலகாண்டமூர்த்தி நாயனார் அப்பேர் பெற்றார்என்றுதெரிகின்றோம். திருநீறு சைவர்கள் என்பவரிடத்திலேயன்றிக் கிறித்தவர், மகமதியர், பௌத்தர் முதலியவர்களிடத்தும் ஓரோர் காலத்தில் ஏகதேசத்தில் கொண்டாடப் பெறுகின்றது. சைவர்களிடத்தேயோ என்றால் ஆறு அங்குலம் நீளம் அணியப்பெறுவது முதலாகிய விதிகளிலிருந்து சங்கார முறையிலே படிப்படியாய்ச் சோபானக்கிரமத்தில் குறைந்துகொண்டே வந்து, "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்" என்ற திருவாக்கின்படி மாறி மாறிக் கடைசியாய் "அரை



மாத்திரையிலடங்கும்படி" என்றபடி ஓர் அங்குலம், அரையங்குலம், ஒரு பொட்டு, பின்னர் அதையும் அழித்துவிடல் என்று வந்துவிட்டது. பரிதாபம்! நீற்றினை நிறையப் பூசுதலால் வரும் பெருமையையும் ஊதியத்தையும் எத்தனை வகையிலே நமது பெரியார் சொல்லிவைத்து இருந்தும், அனுபவத்தில் நடந்து காட்டி யிருந்தும் சைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் இக்காலத்துச் சிறுவரும் பெரியவர்களும் கூட அதைப் பின்பற்றாதொழிந்து வருவது நமது தீவினையேயாகும்.

இனி இந்தச் சைவமானது எங்கே இருக்கின்றது என்று சில பேசுவோம். சைவமென்பது ஒரு சாதிப் பெயராக அநேகர் எண்ணி வழங்குகிறார். உலக வழக்கில் அது சாதிப் பெயராய் வழங்கிவருதலும் உண்மையே. ஆனால் அதனைச் சமயக்கொள்கையின் பெயராகவே மேலே விவரணத்தில் எடுத்துக் கூறினோம். சாதிச் சைவம் வேறு; சமயச் சைவம் வேறு. சாதிச் சைவத்திலே சமயச் சைவம் ஏகதேசத்திலேதான் காணப்படும். சமயச் சைவத்திலே சைவச்சாதியொழுக்கமும் அப்படியேதான். இவ்வேற்றுமை புணராதார் இதனால் பெருங்கலகம் விளைத்துக் கொள்வர். பெருங்கலகத்துக்கு நிலைக்களனாதலின் இதனைப்பற்றிச் சில உதாரணங்களால் விளக்குதல் அவசியமாகும். மனிதர் என்பவர் எல்லாரும் மனிதர் அல்லர். கைகால் முகம் முதலிய மனித உறுப்புக்கள் மட்டும் பெற்றிருப்பதாலே எல்லாரும் மனிதர் என்ற சொல்லுக்கு இலக்காகார். மனிதருள்ளே மனிதரல்லாதவரும் அநேகருளர். மனிதருக்குள்ளே பாம்புண்டு, புலியுண்டு, காடியுண்டுஎன்ற ஒருபாட்டுக்கூட ஒரு புலவர் பாடியுள்ளார். இவ்வகை பாம்பு மனிதர், புலி மனிதர், காடி மனிதர்களை எவ்வாறு தெரிவது என்றால் "காமமென்கிற கதுவு வெந்தீயும் கடுஞ்சின மெனப்படு புலியும்" என்று சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கை ஒட்டிக் கண்டுகொள்ளலாம். மனிதர்க்குள்ளே புலி மனிதர், காடி மனிதர் இருப்பது போலவே சைவர்க்குள்ளேயும் சைவரல்லாத சமணர், கிறித்தவர், புத்தர் முதலியோர் உளர். இவ்வாறு நான் சொல்வது புதிதாகத் தோற்றும். புலாலுண்ணாதவனாய்க் கொண்டுங் கொடுத்தும் உள்ள குடிப்பிறப்பினால் மட்டும் சைவனாய் நிற்பான் ஒரு சாதிச் சைவன். அவன் சமயச் சைவனாலே ஆசாரியராய் வழிபடப்பெறும் திருஞான சம்பந்தப் பெருமானைப்பற்றி, 'இவர் சுமார்த்தப் பற்றுடையார், சைவ சமய பற்றைவிட இவருக்குத் தமது சுயசாதிப் பற்றே மிக்கது' என்றாவது, அல்லது 'ஐயோ! சமணர்கள் பழந்தமிழர், கொல்லா நோன்புடையர், இவர்களைப் பற்றி நம்மை ஏமாற்றி இவர் சமணர்களைக் கொலை புரிவித்தார், கொலைக் குற்றமுடையார்' என்றாவது சொல்வானானால் அந்தச் சாதிச் சைவனை நாம் சமயச் சைவன் என்போமா? இவன் சாதிச் சைவனாயினும், சமயச் சமணனாம் என்று பிரித்துணர்ந் தொழுக வேண்டுவது தானே முறை. இது போலவே பிறவும் கண்டுகொள்ளலாம்.

சைவம் என்பது ஒரு சாதியையோ அல்லது ஒரு மொழியையோ பற்றியதல்ல என்பது உறுதி. சிலர் இதைச் சைவம் சாதியையே பிடித்ததுஎன்றும் தமிழ் என்றும் இவ்வாறெல்லாம் எண்ணுதலில் சைவ[illegible]

187152

பாடுகள் பல. சைவம் உலகமெல்லாம்
பரந்து ஓங்கியது. தமிழ்நாடும் தமிழ
ரும் மட்டும் சைவத்திற்கு இலக்கான
வர் என்பது தவறு. "உலகெங்கும்
நிரம்பிய சைவம் உயர்ந்துமன்ன"என
வும் "முதற் சைவம்" எனவும் "பொ
ருட் சமய முதற் சைவ நெறி" என
வும் வரும் திருவாக்குகள் என் கொள்
கையை நிறுத்துவனவாம். அப்பாலு
மடிச்சார்ந்தார் புராணத்திலே ஸ்ரீ சேக்
கிழார் சுவாமிகள்,

"மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கப்பால்
முதல்வனு ரடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத்தொகையிற்கூறு
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்
[னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமே லடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச்சார்ந்தார்கள்
செப்பிய வப்பாலுமடிச் சார்ந்தார் தாமே."

என்றருளினமையால் இனிது விளங்
கும். இஃதிப்படியாகத் தெலுங்கச்
சைவர், கன்னடச்சைவர், வடமொழிச்
சைவர், ஆங்கிலச் சைவர் முதலியோ
ரை நாம் எவ்வாறு ஒதுக்கிச் சைவத்
தைக் கணக்கிடக் கூடும், மேலே காட்
டிய அடையாள வகையிலே எங்கும்
பரந்த சைவம் காலத்தையும் இடத்தை
யும் பிற கட்டுப்பாடுகளையும் கடந்து
நிற்பது என்பது விளங்கும்.

வடமொழி தமிழ் என்ற கேள்வி
இப்போது நமக்குள் புகுந்துகொண்டு
நம்மை அளவுக்கு மீறி அலைக்கிறது.
சிவ என்னும் மொழி வடமொழியிலே
ஒளி என்னும் பொருள்கொண்ட சிவ
என்பதன் எழுத்து நிலை மாறிய பகுதி
யிற்பிறந்த சொல்லோ, அன்றி (எல்லா
வற்றினும்) நிற்பது கிடப்பது என்
னும் பொருள்கொண்ட சிவ என்னும்
பகுதிகொண்ட சொல்லோ, அல்லது
சிவப்பு என்ற தமிழ்ப் பகுதியிற் பிறந்
ததோ என்பது பெருஞ்சண்டை. அர
சாங்க உத்தியோகப் பற்றுக்களிலே
யும், இந்நாள் உலக வியாபாரங்களிலும்
உழலும் ஆசிரியர்களுக்கும் பிறர்க்கும்
சண்டையும் இகலும் உளதாயின் அது
அவர்கள் உயர்வாய்க் கொள்ளும் மொ
ழியாகிய வடமொழியையும் அதிற்
கண்ட நூல்களையும் பற்றியது. இவர்
களைப்பற்றிய குரோதம் ஆடும் ஓநா
யும் கொண்ட கதைபோல இவர்களின்
முன்னோர்களையும் பிடித்து அவ்விரோ
தங் காரணமாக சச்சரவுகளுக்கு இட
முண்டாக்கி விட்டது நமது துர்பாக்கி
யம். வடமொழி என்ற வாடைதானும்
பலர்க்குத் துவேஷமாயிற்று. நேற்று
வந்த ஆங்கிலத்தைக் கைக்கொண்டு
பயன்பெற முயலும் இந்நாள் மக்கள்,
பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தமிழகத்
திலே உடன்பயின்று நமக்குப் பல
ஞானங்களை உதவிய வடமொழியை
வெறுப்பானேன்? அப்படிவெறுப்போ
மானால் அவ் வடமொழியையும் நூல்க
ளையும் நூன் முடிவு முதலியவற்றையும்
கைக்கொண்டு ஒழுகி நம்மையும் படை
த்து நமக்கு அளவில்லாத தமிழ்ப்பண்
டாரங்களைத் தேடிவைத்த நமதுதமிழ்
மூதறிஞர்களையுங் கூட அன்றோ வெ
றுத்து ஒதுக்குதல் வேண்டும். அப்படி
யானால், ஐயோ! தொல்காப்பியர், சைவ
சமயாசாரியர்கள், புராணிகர்கள், தாயு
மானார், குமரகுருபரர், சிவஞான முனி
வர் முதலிய ஒருவரும் தப்பி நமக்கு
எஞ்சி நிற்கமாட்டார்களே! வடமொழி
யைப் பார்ப்பனருக்கு ஒதுக்கித் தரு
வானேன்? காளிதாசரும்பிறரும் பார்ப்
பன ஆரியரா? தமிழ்ப் பெரியார்களிற்
பார்ப்பனரை எவ்வாறு ஒதுக்குவது?

பம்பாய் மாகாணத்திலேஉள்ள காம்
பிலியில் வாழ்ந்த நேச நாயனார் நமது



நாயன்மார்களிலொருவர். கௌதமசாக்
கியமுனி கைக்கொண்ட சாக்கிய சம
யத்தவரானசாக்கியநாயனார் அச்சமயச்
சார்பாகிய ஒழுக்கத்திலிருந்து வேறுப
டாமல்சிவவழி பாடாற்றிய வகையிலே
சாக்கியத்துக்குள்ளே சைவம் புகுந்து
கொண்டது. கொலையும் புலால் மறுத்த
லுமே சைவத்திற்குஅடிப்படை என்ற
நிலைதாலும்கண்ணப்ப சுவாமிகள்சரித்
திரத்திலேவேறுபிரித்து உணரவேண்
டியிருக்கிறது. இவற்றையெல்லாங்கண்
டேனும் சாதிச்சைவம் வேறு, சமயச்
சைவம் வேறு என்று கண்டு அந்நிலை
யிலே நாம் ஒழுக முற்படுவோமானால்
நமக்குள் வரும் பல சண்டைகள் ஒழி
யும்.

இனிச் சைவன் என்பவன் சைவ
ஒழுக்கம் பூண்டு நடப்பவன் என்பது
யாவரும் ஒப்புவர். இதனைச் சாதி
யோடு பொருத்தியதனால் வரும் சண்
டைகள் யாவும் சிறிது ஊன்றிப்பார்க்க
ஒழிந்து போம். இவற்றின் விவரம்
மேலே சைவத்தைப் பற்றிய பேச்சில்
சொல்லியுள்ளேன். எப்படியாயினும்
சாதிச் சைவனுக்குச் சமயச் சைவ
ஒழுக்கம் இன்றி யமையாததென்று
யாவரும் மறுக்கமுடியாது.

இனிச் சைவ நூல்களும் அவற்றின்
முடிவுகளும்பற்றிச் சில பேசுதல்
வேண்டும். "வேதநூல் சைவநூல் என்
றிரண்டே நூல்கள்" "அருமறை
யாகம முதனூல்கள்" "வேதாந்தத்
தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன்"
எனச் சந்தான குரவர்களும், "வேத
மோடாகம மெய்யா மிறைவனூல்,
ஓதும் பொதுவும் சிறப்புமென்றுன்
னுக" எனத் திருமூலரும், "ஆகம
மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க"
எனத் திருவாதவூரரும், "தொகுத்
தவ னருமறை, யங்கமாகமம் வகுத்த
வன்" எனத் திருஞான சம்பந்தரும்,
"எண்ணி லாகம மியம்பிய இறை
வர்தாம் விரும்பும் உண்மை யாவது
பூசனை" எனச் சேக்கிழார் பெருமா
னும் எடுத்துக் கூறியவாற்றானும் பிற
வாற்றானும்வேதமும்ஆகமமும்சைவத்
திற்குப் பொதுவும் சிறப்புமாகிய முத
னூல்களாய், இறைவன்வாக்காய் நமது
முதற் பிரமாண நூல்களாம். இப்
போது காணும்படியிலே இவை வட
மொழியிலிருத்தல் பற்றியாவது, இப்
போது காணும்படியிலே நமது புதிய
எண்ணங்களுக்கு மறுதலையாகச் சில
இவற்றிற் காண்பது கொண்டாவது
இவற்றை நமது முதனூல்கள் என்று
உடன்படாது ஒதுக்குதல் எனக்கு
உடன்பாடில்லை. அவை தமிழிலே ஒரு
காலத்திலிருந்து கடல் கொள்ளப்பட்
டொழிந்தன. இப்போதுள்ளவை ஆரி
யர் புகுத்தியன என்பனவாதி கொள்
கைகள் நான்மேலே காட்டிய சைவத்
தின் உலகம் பரந்தநிலைக்கொள்கைக்கு
மாறுபடுவன. இவையும்எனக்குஉடன்
பாடில்லை. இப்படிக்கொண்டால்சைவத்
திற்குத் தமிழினன்றித் தாயகமில்லை
எனவும், தமிழைக்கடந்து நிற்கும் ஆற்
றல் சைவத்திற்கு இல்லை எனவும் முடி
யும். இந்நிலையினை நாம் கொள்வோ
மாயின் இப்போது சைவ சாத்திரங்க
ளாகவும், திருமுறைகளாகவும் சைவம்
போற்றும் நூல்களுக்குள்ளேயும் பல
முரண்பாடுகள் நிகழும். நமது சைவப்
பெரியார், பலரையும் சமயாசாரியர் சந்
தானசாரியர்களையுங் கூட நாம் புறகிடு
தல் வேண்டிவரும். இவ்வாறு எழும்
ஆரியப்பார்ப்பனவிரோதம்வடமொழி
விரோதம்பற்றியே நமது பரமாசாரிய
மூர்த்திகளாகிய திருஞான சம்பந்த
சுவாமிகளையும் புறங்கூறப் பலர்சைவர்

என்பார் புறப்பட்டனர். 'சேக்கிழார் சுவாமிகள் உண்மையல்லாத கூற்றுக் கள் சொன்னார்கள். மயங்கிக் கூறினார் கள்' என்றுளவனாவது சொல்வானாயின் அவனைக் காண்பதற்கும் கூசும் எனது கண்கள். "அற்றன்று நான் ஆராய்ச்சி முறையிற் கூறுகின்றேன். எதிலும் குருட்டுத்தனமான நம்பிக்கை வைக்கலாகாது. அது நெடுந்தூரம் நம்மைக் கைகொடுத்துச் செல்லாது" என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் அது உண்மையே. "நமது உண்மை நாயன்மார்களையும், அவர் சொற்செய்கைகளையும், சாத்திரம் திரு முறைகளையும் இன்னும் சைவ உலகம் தெளியவில்லை. இவை இன்னும் நமது குடுக்கை மூளை ஆராய்ச்சி செய்து தெளிவு படுத்த வேண்டி நிற்கின்றன" என்று சொல்வது உண்மையாயின் அது சைவ உலகத்திற்கு மிகக்கேடான நிலையேயாம். தெள்ளத் தெளிய வடித் தெடுத்த பொருளை ஒருவன் பின்னும் தெளியவில்லையென்றால் அது அவன் குற்றமேயாகும். பொருள்களிலே ஆராய்ச்சி செல்லும் பொருள்கள் எனவும் ஆராய்ச்சி செல்லாப் பொருள்கள் எனவும் இரு பிரிவு உண்டு.

நமது சைவ முதனூல்களாகிய பொது நூலாம் வேதமும் சிறப்பு நூலாம் ஆகமங்களும் (இவை திருமூலரால் வகுக்கப் பெற்றபடி) திருமுறைகள் பன்னிரண்டும், சாத்திரம் பதினான்கும் சைவத்துத் தெள்ளிய வடித்த பிரமாண நூல்களாம். இவற்றை ஆராய்ச்சி செய்து தப்போ ஒப்போ காண்பது சைவனுக்கன்றி ஏனைச் சமயிகளுக்கே உரிய தொழில். சைவன் என்று தன்னைச் சொல்பவன் அவ்வாறு சென்றால் அவனை ஏனையவன் கணக்கில் வைத்தொழுகுதலே நமக்கு முறையாம். "ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா" "ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச், சோதிக்க வேண்டா" என சைவ சமயப் பரமாசாரியர் அருளினர். இதற்கு நமது சேக்கிழார் சுவாமிகள், "ஓதுமெல்லை உலப்பில வாதலின், யாதுமாராய்ச்சி யில்லையா மென்றதாம்" என்று உரையும் விதந்தோதினார்கள். தனது ஆசாரியனையும், அருள் நூலையும் ஆராய்பவன் தனது தாய் தந்தையரை ஆராய்பவனே யாவன். ஆராய்ச்சி வேண்டாமென்று நான் கூற வரவில்லை. நமது மேற்காட்டிய பிரமாண நூல்களும் கூடப் பொய்யும் பிறழ்வும் கூறும் என்ற உணர்ச்சி வருவதானால் அவ்வாராய்ச்சி நமக்கு வேண்டாம் என்பதே எனது கருத்து. கிறித்தவர்க்கு விவிலிய நூலும், மகமதியர்க்குக் குரானும், அருகர்க்குப் பிடகமும் பிரமாண நூல்கள் ஆகும். அதுபோலச் சைவத்திற்கு இவை பிரமாணம் என்று நாம் வகுத்து உட்கொள்ளாவிடின், "மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரியும்" பட்டியே யாவோம். பிரமாண நூல்களின் தாரதம்மியமும் தமக்குத்தாமே பிரமாணமாக உள்ளவற்றையும் நாம் தெரிந்து முறைப்பட வகுத்துக் கொள்ளாவிடின் வீண் கலகத்துக்கும் பாவத்துக்குமே ஆளாவோம். நமது சமய நூல்களைச் சுட்டெரிக்க ஒருவன் கூறினால், அவனுக்கு அதன்படியே சுட்டெரிப்போம். பெரிய புராணமாதி சமய நூல்கள் பொய்க் கதைகள் என்றும், இவற்றின் செய்யுளினும் ஒப்பாரிப் பாட்டிலே இன்பமுளது என்று ஒரு புலவன் சொல்வானானால் அவனுக்கும் அவன் எண்ணிய படி ஒப்பாரி பாடுவோம்.



சுமார்த்த பிராமணர் என்றகாரணத்தால் திருஞான சம்பந்தப் பெருவாழ்வும், அவர் சரிதத்திலே சமணர் கழுவேறியதாகக் கூறும் பகுதியைச்சொல்லிய அளவிலே நம்பியாண்டார் நம்பிகளும் சேக்கிழாரும், வடமொழிதென்மொழி வகுத்து ஆகமங் கூறவந்தகாரணத்தினாலே திருமூலரும் ஆராய்ச்சியிலே ஒதுக்கப் பெறுவார்களாயின் நாம் பின்பற்றி ஒழுக ஆசாரியர்களும் நூல்களும் இல்லாமலே போய்விடும் என்று நான் உங்களுக்கு எச்சரிக்க வேண்டியவனா யிருக்கிறேன்.

முடிபு.-சைவம் யாது? சைவர் யார்? சைவநூல் யாவை? அவற்றின் முடிபுகள் யாவை? என்பனபற்றி எனது எண்ணத்திற் பட்ட சில மொழிகள் மேலே பேசினேன். சைவர்களாகிய நமது கடமை ஒன்றேயுளது. மேலே சொல்லியவாறு சைவ நூல்களையும் அவற்றிற்சொல்லும் பொருள்களையும் போற்றுதல் வேண்டும். சைவநூன் முடிபுகளாய சிவஞானபோதத்தின் 12 சூத்திரங்களிலே போதிக்கப் பெற்ற பதியுண்மை, உயிர்களின் இருப்பு, பாசக்கட்டு இவற்றை அறிந்து பாச நீக்கத்திற்குரிய சாதனங்களாகிய குருமொழி, திருவைந்தெழுத்து ஆதியவைகளை நல்லாசிரியர்பால் நன்குணர்ந்து, அந்த நல்வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகி, நாம் பாசத்தினின்றும் விடுதலை பெற்றுச் சிவத்தை அடைந்துய்வோம். இதற்கு இறைவனருளும், நல்லடியார் கூட்டமும் துணைசெய்வதாக.

இந்த முடிபுகள் வேறு எந்தச்சமயம், எந்த நூல்களாலும் இதுகாறும் மறுக்கப்பெறவில்லை; இனி மறுக்கப் பெறப்போவதுமில்லை. இவையே எல்லா நூல்களுக்கும் முடிந்த முடிபுகளாம். அன்பர்களே, உங்கள் அன்புக்கு மிக நன்றியுடையேன். நலம். நலம். நலம்.

# மூன்று கேள்விகட்கு முடிந்த விடை

[அ. வரதநஞ்சைய பிள்ளை]

10-1-31உ யில் வெளிவந்த திராவிடன் பத்திரிகை 4-வது பக்கத்தில், சைவப் பெரியார்களே! எனத் தடித்த எழுத்தில் விளித்து, 1. சர்வ வியாபகனான சிவன் பஞ்சமன் உடலில் இல்லையா? 2. கடவுளுக்கு மனிதனால் தீட்டுண்டாகுமா? 3. சிவத்தின்மகிமையை விடத் தீட்டின் சைதன்யம் பெரிதா? சைவ சித்தாந்தப் பிரசங்கியாருக்கு மூன்று கேள்விகள் எனக் குறித்து, தூத்துக்குடி நண்பர் திரு. இ. எம். குமார் வரைந்தவற்றைக் கண்ணுற்றேம். தூத்துக்குடியில் நிகழ்ந்தஎமது சொற் பொழிவைக் குறிக்கொண்டு ஆராயுமுகத்தான், அக் கேள்விகள் எம்மை நோக்கி எழுந்தனவாகலின், அவர் வினாக்கட்கு யாம் அறிந்தவாறு விடை கூறுவது நியாயமும் கடமையுமாகின்றது.

இம்மூன்று கேள்விகளும் கருத்து வகையில் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கியனவே; தீண்டாதாரை ஆலயத்தில் ஏன் விடுதல் கூடாது? என்ற ஒரே கேள்வியாகவே கொள்ளலாம். பின்னுஞ் சொல்வோமானால் இக்கேள்வியைக் குமார் கேட்டலும்பயனில்லை. யாம் உரைப்பதும் வீண். தீண்டாதார் ஆலயம்புகுவதும் புகாமையும் ஒன்றே,

ஆதலில், இவ் வினு மிகை என்றொரு சொல்லாலே விடையிறுக்கக் கூடிய தாயிருக்கின்றது. அதுதான் ருசியான பாகம். நமது இ. எம். குமார் தமது கூற்றாகக் கூறிய வுபதேசமே நாம் இவ்வாறு கூறத் துணிவுதருகின்றது. அஃதென்ன வென்பீர்களோ? கேண்மின் அன்பர்காள்! "கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்பதைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்யப் பிரியப்படவில்லை, ஏனெனில், அவர் இருப்பதும் இல்லாததும் ஒன்றென்பதே நமது கொள்கையாகும்" எனக்குமார் எழுதுகின்றார். இதனையே அடியாகக் கொண்டு யாம் சில வினவுகின்றோம்.

1. கடவுளைப்பற்றி ஆராய்ச்சிசெய்யவோ, உண்டெனினும் பயனுண்டெனக் கொள்ளவோ கூடாத நிலைமையில் இவர், கடவுளின் கோயில்களைப் பற்றியும், அவருக்குத் தீட்டுண்டா என்பது முதலான சந்தேகங்களைப்பற்றியும் விசாரிக்க அவசியமேயில்லையே? கடவுளை நம்பாதவரும் எதிர்பாராதவருமாகிய இவர் தம் பொருட்டில்லாவிடினும், தாழ்த்தப்பட்ட ஏழுகோடி மக்கள்பால் பேரிரக்கங் கொண்டு கோயிலில் நுழைவிக்க விரும்புவாராயின், அவர்கட்குத் தாம், அக்கோயிலில் அணுகிச் செல்வதாற் போதரும் நன்மையும், விலகி யகல்வதால் வரும் தீமையும் ஒன்றுமில்லையெனத் தெள்ளத் தெளிய அறிந்து துணிந்தபின் இவர் அப்பயனற்ற காரியத்தை ஏன் விரும்புகின்றார்? அதனுல் தாழ்த்தப்பட்டோர் எய்தும் பெரும்பயன்தான் யாதுளது என்று கருதுகின்றார்?

2. கோயிலிலிருப்பது கல்; அதனை கும்பிடுவோர் முழுமூடர் என்னும் இவர்க்கு நம் மூடக்கும்பலுக்குள் தாழ்ந்தோரை நுழைத்துப் பின்னும் பெருமூடராக்காது தமது தூய அறிவையுடைய கும்பலுள்ளேயே வைத்துப் பேணிச் சீர்திருத்தம் செய்வதால் பயனும் பாராட்டலு முடையதாகு மன்றோ?

3. இங்ஙனம் தமக்கும் தாழ்ந்தோர்க்கும் பயனற்றதாயும் அறிந்து கொள்வதும் கொள்ளாமையுமொன்றாயுமுள்ள கேள்விகளைக் கேட்டற்கு ஏன் முந்துகின்றார்? இஃது வீண் வம்புமொழியன்றோ?

வாசக நேயர்காள்! இங்ஙனம் யாம் வினவுக்கு விடையிறுக்காது வினவியோரை வினுதல் முறையாகாதேனும், நம் நண்பர் குமார் கூற்று, நமது எளிதாகிய விடைக்குப் பயன்படுகின்றதென இங்கே காட்டினேம், வேறன்று; எம்மைக் கூறுதன கூறிக் கேளாமற் கேட்கும் அவர் வினுக்கட்கு நியாயமான வழியில் விடைகூற யாம் பின்னிடவில்லை.

1. இனி வினுக்களுக்கு விடை:—எல்லாவுயிரினும் நிறைந்த சிவன் பஞ்சமன் உயிரினும் நிறைந்துள்ளார். இன்றேல் அவரது பூரண வியாபகம் பங்கமுறும்.

2. கடவுட்கு மனிதனுல் தீட்டுண்டாகாது. அவன் தீட்டரிய திருவுருவினன்.

3. சிவத்தின் மகிமையைத் தீட்டுத் தீண்டாது. இரவி ஒருபோதும் இருளான் மறைப்புறுதலின்று.

ஆதலின் நீர் விரும்பும் வண்ணம் பஞ்சமர் சிவலிங்கத்தை அணுகி வழிபடலாம்.

ஒன்று:—நீர் கேட்டதும் யான் கூறியதும் சிவத்திற்கே; இடை நின்ற



மக்கட் பகுதியினர்க்கல்ல என்பதை நினைவு கூர்தல் வேண்டும்.

தாழ்ந்தோரைக் கோயிலுட் புகவிடாதவர் சிவமல்லர்; நம்மனைய மக்களே. கடவுட்குத் தீட்டுண்டென மக்களே கூறக் கேட்கின்றோம்.

ஆதலின், நீங்கள் மக்கள் மனப்பான்மையை மாற்றித் தீண்டாதாரை ஆலயத்தில் அனுப்புங்கள்; கடவுள் கோபமுறார்.

அன்பர்காள்! நெடுநாட் பழக்கம் நன்றோ தீதோ எளிதில் மாறுவது யாவர்க்கும் கஷ்டமே. அஃதொப்பவே புதுப் பயிற்சியும் நாளடைவிற்றான் வழக்கத்திற்கு வரும்.

மக்களை மக்கள் தீண்டக் கூடாதென்ற பெருஞ்சச்சரவிருக்க, ஆலயத்தில் நுழைவிப்பது கலாம் விளைவித்து உயிர்ச் சேதம் பொருட்சேதமுண்டாக்காமற் போகாது. ஒன்று செய்யுங்கள். தாழ்த்தப்பட்டோர்க்கு நீங்கள் பேரிரக்கங் கொண்டு உண்டி, உடை, பருகநன்னீர் உதவி, கல்வி, கைத்தொழில்களிற் பயிற்றி, கொண்டு கொடுத்து நும் சுற்றமாக்கி மக்களுக்குட் சமத்துவம் பெறச் செய்யுங் காலத்தே ஆலயப் பிரவேசம் தானே எளிதாகக் கைவரும். அதில் ஐயமே வேண்டா. அவசரப்படாது சற்றுப் பொறுமின்.

பிறரைச் செய்க என்று விதிப்பதினும் நீங்கள் நடந்து காட்டலே சிறந்தது. இஃதுடன் என் விடை முடிகிறது.

குறிப்பு:—1. யாம் கூறியவற்றின் உண்மைகளை நடுநிலை நோக்கோடு நாடுவோர் காண்க.

2. தாழ்ந்தோரைத் தாங்கல் தக்கதே. எவ்வுயிர்க்கும் இரங்கியருளல் அன்பின் வழியதே. அது சைவத்தின் தனிப்பெரு மாண்பே.

3. ஆலயத்துள் நுழையப் பெறாமையால் நம் சகோதரப் பஞ்சமர் தாழ்ந்து குறை யுறுகின்றாரல்லர். அவர்கட்கு இக்கால் வேண்டுவது, உண்ண நல்லுண்டி, உடுக்கத் தூயவுடை, பருக நன்னீர்க்கேணி, அறிவுதரக் கல்வி, பொருள் தேடக் கைத் தொழில். இவையே அவர்கள் விரும்புவன வேண்டுவன. இவற்றைச் செய்வோம். ஆலய வழிபாடு செய்து முத்தியடைவதன் முன் அவர்கள் பட்டினிகிடந்து பரமபதம் சேர்கின்றனரே! தண்ணீர் வேட்போர்க்கு எண்ணெயை வாயிலூற்றுவதோ?

4. பஞ்சமரைச் சிவமும், சைவ சமயமும் ஒதுக்குமாயின், திருநாளைப் போவாரும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அறுபான்மும்மை நாயன்மாருள்வைத்து நம்மால்வணங்கப்படாரென்பதை உள்ளக் கண்ணூன்றி நோக்குமின். பக்குவமுடையவர்களெச்சாதியாராயினும் இறைவன்கருணைக்கு ஒரு நிகரானவர்களே. தாமே உயர்ந்தோம் என்பாரைப் போல் அவ்வளவு இழி பிறப்பினர் எவருமிலர். ஒருவர் உயர்ந்தோராவது குலத்தா லன்று, குணத்தாலும் அஃகியகன்ற நுண்ணறிவாலும், பிறர்க்குக் கைமாறு வேண்டாதுதவும் கடப்பாட்டானுமேயாம். இவை யாரும் மறுக்கமுடியாத முழு உண்மைகளாம்.

—சிவநேசன்.

[குறிப்பு:—இவ்விடைகள் திருப்பாதிரிப்புலியூரிற் கூடிய சைவர் மகாநாட்டின் தீர்மானங்கட்கு ஒத்திருத்தலின் இவைகளை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இனியேனும் இவ்வினுக்கள் எழாமலிருத்தல்கூடுமோ? —பத்திராசிரியர்.]

# ஐந்தொழில் குறிக்கும் அபய திருக்கரம்

[தொகுத்தது—தி. கு. கி. நாராயணசாமி]

[ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள், தமது திருமடத்தில் கந்தர் சஷ்டி முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிமுதல் முருகன் பெருமையை விளக்கி வருகிறார்கள். இப்பகுதி கார்த்திகைமதி ௨௯-ம் நாளைய சொற்பொழிவின் குறிப்பின் பெருக்கு.]

முருகன் திருவுருவம் தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு திகழ்வது. அத்தத்துவ உருவகம் கந்தபுராணம். இந்நூலில் எல்லா வுறுப்புகட்கும் உயர் சிறப்புகள் மிளிர்கின்றன. அவற்றை அறையத் தலைப்பட்டு தலைமையாகிய சிரம் செப்பி, வலது கரங்கள் பற்றிக் கூறிவந்தோம். நென்னல், அபய திருக்கரத்தின் ஐந்தொழில் குறிப்பைப் பகரப்புகுந்து படைத்தல் காத்தல் முடித்தோம். ஏனைய முத்தொழிலை அக்கரம் குறித்தல்பற்றி இன்று இயம்புவோம்.

“ * * * பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்
குதித்தனன் உலகமுய்ய”

என்றும்,

“ முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய காமீ ராறும்
அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழு மலரடியும்”

என்றும் கந்தம் பல முறை கூறுதலின் கரம் பன்னிரண்டென்பதை உணர்க. அப்பன்னிரு கரங்களில் வலது, இடது கரங்கள் பற்றி,

“ வீற கேதனம் வச்சிரம்
அங்குசம் விசிகம் மாறிலாத
வேல் அபயமே வலம் ;
இடம் வாதம் ஏறுபங்கயம்
அணி மழுத் தண்டுவில்
இசைந்த ஆறிரண்டு கை ”

என்றனர். ஆதலின், அபய திருக்கரம் வலக்கை யாகும்.

ஐந்தொழிலை சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரஹம் என்பர் வடநூலார். இதனை முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பர் நந்தமிழர். இவ்வைந்தும் அருளின்பாற் படுவன. இதனைச்சிவஞானசித்தியார் சுபக்கம் சுட்டுதல் காண்க.

“ அழிப்பு இளைப்பாற்றல் ; ஆக்கம்
அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் ; நுகரச் செய்தல்
காப்பது ; கன்மம் ஒப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பு ;
அருள் செய்தி தானும்
(பழிப்பொழி) பந்தம் வீடு ;
பார்த்திடின் அருளே எல்லாம்.”

உரை :—ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென்னும் ஐந்தும் முறையே, இளைப்பாற்றலும், கன்மங் கழியு முகத்தான் மலபாகம் வரச்செய்தலும், கன்மங் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்ம வொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதிப் பயத்தனவாகலான் ஐந்தொழிலும் அருட்செயலேயாகலின், இவற்றுள் சில மறத் தொழிலேபோலுமெனப் பழித்தலை யொழிவாயாக,



மற்றும் இதனை சிவப்பிரகாசம் :

“ ஏற்றவினை யான்றுளின்
திருவிளை யாட்டாக
இயம்புவர்க ளணுக்களிடர்க்
கடனின்று மெடுத்தே
யூற்றமிக வருள்புரித
லேது வாக
வுரைசெய்வ ரொக்கமிளைப்
பொழித்தல் மற்றைத்
தோற்றமல பாகம்வரக்
காத்தல் போகந்
துய்ப்பித் தறிரோதாயி
நிறுத்த லாகும்
போற்றலரு மருளாருளே
யன்றி மற்றுப்
புகன்றவையு மருளொழியப்
புகலொ ணாதே ”

என்று கூறுதல் காண்க.

மேற் கூறியவற்றுள் சம்ஹாரம் - (சம் - ஹிரு - அரன்) - செவ்வையாய் ஒடுக்கிக் கொள்ளுதல் - அழித்தல் - இளைப்பாற்றல் எனப்பொருள் படுவது அறிந்தோம். அஃதும் பிறவும் அருளே என்றும் தெளிந்தோம். அழித்தல் அருள் என்பதால், மக்கள் முருகனை அழித்தல் தெய்வம் எனக் கூறும் கூற்று அறியாமை யன்றோ? இனி எதனை அழிப்பது? எதனின்று நீங்கி இளைப்பாறுவது? என்ற இன்னபிற கடாவிற்கு விடை ஆராய்வாம்.

“ இன்பமும் பொருளும் அறனும்” என்று மக்களின் உள்ள விருப்பங்களை இயற்கைப்படி முறையில் வைத்தனர் தொல்காப்பியனார். ஆதலின் மக்கள் அவாவுவதில் தலையாயது இன்பம். இக் காரணம்பற்றியே அஃது முதலில் வைக்கப்பெற்றது. பிற இதன் சார்பில் எழுந்தவை. இது நிற்க, இன்பம் மக்களது வேட்கையெனின் அதின் எதிர் மறையாக துன்பம் ஒழிதல் வேண்டுமன்றோ? துன்பத்தை அழித்து, இளைப்பாற்றவைக்கவல்லவன் எவன்? இறைவன் ஒருவனே துன்பத்தை அழிக்க வழி வகுக்க வல்லுநன். அவன் வகுத்த வழி யென்னை? அஃதே அழித்தலென்னும் அருள்வழி. துன்பம் துன்பம் என்றோமே அஃது எத்துன்பம்? நாம் கருதும் எல்லாம் துன்பமேயோ? மற்று அழித்தற்குரிய துன்பம் எவை? இதனை வைராக்கிய தீபத்தில் சாந்த லிங்கர் சாற்றுதல் காண்க.

‘உடலிதற் பவத்தோ ரைம்பெருந் துயர்மாய்ந்
துறுகணத் துயரினெண் மடங்கா
விடையுள திதிக்கட் டியா மூப்பறிவோங்
கிளமையிற் பிணியுறு விடத்தும்
விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான்
மிகுபொரு டேடுத றுயரீண்
டடையினு மதனைக் காக்குத றுயர்வேந்
தாயினு மிகுநாற் றுயரோ’

மேற்கூறிய துன்பங்களை மூன்றாகத் தொகுக்கலாம். அவை பிறப்பிலே - இருப்பிலே-இறப்பிலே யாம். பிறப்பின் “ஐம்பெரும் துன்பங்களை” சிதம்பர சுவாமிகள் உரையில் காண்க. இருப்பிலேயுள்ள துன்பங்கள் பால குமார விருத்த பருவத்தில் வருவன. ஈண்டு, திருவிளையாடலில் விருத்த குமார பாலரானபடலம் என்றது நினைவிற்கு வருகிறது. திருவிளையாடலில் உள்ளமுறை முதுமையினின்று இளமையாதல். இளமையாதல் இற்றைய நாள் கொண்டுள்ள பொருளில் அன்று. உருவத்திலும் இளமை யாதலாகும். அவ்வாறு முறைப்படுத்திக் கூறியது இறைவன் ஆற்றல் உணர்த்துவான் கருதியாகும். மற்றும் விரிக்கிற் பெருகும். ஈண்டுவரும் துன்பங்கள் அறியாமையாலும் பூர்வ கர்மத்தாலும் வரும் பிணித்துன்பம் ; நீங்காப் பசி

நோய்த்துன்பம்; விடலறும் காம நோய்த்துன்பம்; இவற்றைத் தணிப்பான் கருதிப் பொருளை ஈட்டலினும் பாதுகாத்தலினும் வரும் துன்பம்; நரை திரை மூப்பால் துன்பம்; இறப்பின் துன்பமோ யாவற்றினும் மிகுந்தது. அதன் அளவையார்க்க நம்மனோரால் முடியுமோ? அம்மம்ம! அது அளவை கடந்தது. அது பற்றியே, "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென் கடவேன்" என்று மணிவாசகரும், "சங்கொத்த மேனிச் செல்வா! சாதல் நாள் நாயேன் உன்னை எங்குற்றாய் என்றபோது" என்று நாவரசும், "இறப்பொடு பிறப்பை எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறா திருவிழியும் இரவு பகலாய்" என்று தாயுமானச் செல்வரும் செப்பிப் போந்தனர்.

இங்கு நாம் பெறலரும் பெற்றி ஒன்றுண்டு. அஃது செயற்கரிய செய்யும் பெரியார் துன்பச்சகிப்பை இன்பமாய்க் கொண்டது. அது நம்மனோர்க்கு எளிதில் வருவதன்று. ஞானவாசிட்டம் அருந்தவத்தினர் துன்பத்தைச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்போல் துன்பத்தைச் சலியாது தாங்கி வருவதையும் முகமலர்ச்சியுடன் எதிர்நோக்குவர் என்று கூறுகிறது. பெரியார் சரிதங்கள் காணில் துன்பச்சகிப்பின் அளவை அவர்களை மேன்மைப்படுத்தியது அறிவோம்.

நிற்க. முருகன் இளப்பாற்றவைத்த அருளுடையோன் எவன்? சூரபதுமன். அவன் ஆற்றல் என்னை? மக்கள் ஆற்றல் பாற்பட்டதோ? அன்று.

"மாயையின் வலியோனாகி
மான்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம்
அரசு செய்துக நூற்றெட்டுக்
காயமதழி வின்றாகிக் கடவுளர்க்
கலக்கண்செய்த தீயசூர் முதல்வன்".

இவ்வாயிரத்தெட்டு பிரிதிவி அண்டங்களை நூற்றெட்டு சதுர்யுகங்கள் ஆண்டவன் திறன் என்ன? அயனை அவன் தந்தையாம் காசிபனுக்கு வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்ற பஞ்ச அங்கமுடைய பஞ்சாங்கம் கூற அமைத்தான்!

"விரிஞ்சன் மாறேவராலும்
வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும்வேத
வொழுக்கமும் பிறவுமாற்றி
அருஞ்சிறை யவர்க்குச்
செய்த அவுணர்கோன்"

இவனது இடுக்கண் ஆற்றாது இறைவனிடம் தேவர் முதலோர் முறையிட்ட முறையீடு பல கந்தத்தில் செறிந்து கிடக்கின்றன.

கோவுநீ! எங்கள் குரவனுநீ! தேசிகனீ!
தேவுநீ! மேலாந்திருவுநீ! செய்தவநீ!
யாவிநீ! மற்றை யறிவுநீ! இன்பதுன்பம்
யாவுநீ யாகில் எமக்கோர் குறையுண்டோ?

பார்த்துப் பணித்த பணிசெய்து நின்றன்னை
யேத்தித் திரிதல் எமக்குக் கடனாகும்;
தீர்த்துத் துயரநெறி யுறுத்தி யெம்மையென்
காத்துப் புரத்தல் உனக்குக்கடன் ஐயா! [றுங்

கந்தநம! ஐந்துமுகர் தந்தமுரு
கேசநம! கங்கை யுமைதன்
மைந்தநம! பன்னிரு புயத்தநம!
நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம! ஆறுமுக ஆதிநம!
சோதிநம! தற்பர மதாம்
எந்தைநம! என்றும் இளையாய்நம!
குமாரநம! வென்று தொழுதார்.

"நண்ணினர்க் கினியா யோலம்! ஞானநா
யகனே யோலம்!
பண்ணவர்க் கிறையே யோலம்! பரஞ்சுடர்
முதலே யோலம்!
எண்ணுதற் கரியா யோலம்! யாவையும்
படைத்தா யோலம்!
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே
யோல மோலம்!



தேவர்கள் தேவே யோலம்! சிறந்தசிற்
பரனே யோலம்!
ஏவலர்க் கடியே யோலம்! வேற்படை
விமலா யோலம்!
பாவலர்க் கெளியா யோலம்! பன்னிரு
புயத்தா யோலம்!
மூவரு மாகி நின்ற மூர்த்தியே
யோல மோலம்!"

இங்கு முறையீட்டால் வேண்டிய வேண்டியாங்கு அளப்பரும் ஆற்றலுடையானையும் ஒடுக்கி அருள்புரிவான் என்பது சிந்திக்கப்பாற்று.

ஒவ்வொரு திங்களும் ஒரு நக்ஷத்திரத்தின் பெயர் வாய்ந்தது. சித்திரை - சித்திரை; விசாகம் - வைகாசி; மூலம் - ஆனி; உத்திராடம் - ஆடி; அவிட்டம் - ஆவணி; புரட்டாதி - புரட்டாசி; அச்சுவினி - ஐப்பசி; கார்த்திகை - கார்த்திகை; மிருகசீரிடம் - மார்கழி; புனர்பூசம் - ஆவணம் - தை; மகம் - மாசி; உத்திரம் - பங்குனி. அம்மீன் அம்மதியில் பௌர்ணமியுடன் சேரும். நக்கீரர் களவியலுரையில் பெரிய திருவிழாக்களாகக் கூறப்படும் மதுரை ஆவணியவிட்டம், உறையூர் பங்குனியுத்தரம் களவழியும் குறிக்கும் கார்த்திகைவிழா, மற்றும் மார்கழித் திருவாதிரை; தைபூசம் மாசிமகம் இன்னபிற விழா வரும் நாளில் மதியின் வடிவு ஓர்க. அசுவினி மீன் நிறைமதியுடன் சேர்கின்ற ஐப்பசி மதியில் வளர்பிறையில் திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய நான்கு நாள் சமராபுரி இறைவன் சமர்புரிந்தான் என்பது சரிதம். சஷ்டி திதியிலே சூரபதுமனை சம்ஹரித்தான் - அழித்தான் - இளைப் பாற்றினான் - ஒடுக்கிக்கொண்டான். அஃதும் முறையீட்டால் செய்த கருணைத்திறம்.

இவ்வாறு அழித்ததை கந்தம் யுத்த காண்டம் - சூரபன்மன் வதைப்படலம் 464-ம் செய்யுள் குறிக்கிறது.

"அங்கவர் மொழியும் வெய்யோ னாற்றலுந்
தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந் திருநெடு
வேலை நோக்கி
யிங்கிவ னாகம்போழ்ந் தேகுதி
யிமைப்பி னென்னாத்
துங்கம தடைய சீர்த்திச் சூரன்மேற்
செல்லத் தொட்டான்."

இப்பாவிலுள்ள சிறப்பு காண்க. அங்கவர்மொழி - தேவர் முதலாகிய சாதுக்கள் முறையீடு (பிரார்த்தனை) வெய்யோன் - சூரியன் (சூரபதுமன்) தபனஹா - தபிக்கச்செய்யும் தன்மையுடையோன் - என்பில்லா புழுதவழ்தல்போல 'என்பிலதனை வெயில் போலக் காயுமே' என்ற குறளும் நோக்க; தெரிந்து - தெரிதல் - ஆராய்தல். இதற்கு இரண்டு செயப்படு பொருள். மொழியும் ஆற்றலும் தெரிந்து: செங்கை - காத்தல் கரமாதல் பற்றிச் செங்கை யென்றனர்; வைகும் - எப்போதும் இருக்கிற; திரு - வடமொழி சிதைவு அல்ல - மரியாதையில் நின்றது; நோக்கி - 'நோக்கரிய நோக்கே' என்ற திருவாசக சிவபுராணம் குறிக்கும் நோக்கென்க; ஆகம் போழ்ந்து - உடலைப் பிளந்து - இங்கு பிரித்தல் தொழில் ஒன்றே குறிக்கிறது. கொல் என்னும் வினை குறிக்கவில்லை. சூரன் + பதுமன் = சூரபதுமன்; சூரன் - மயில், பதுமன் - கோழி. இவ்வினை கருணை உணர்த்திற்று; தொட்டான் - தொடுத்தான். பின்னும் இதனை:—

"விடம்பிடித்தமலன் செங்கண்
வெங்கன லுறுத்திப்பாணி
யிடம்பிடித்திட்ட தீயிற்
றோய்த்து முன்னியற்றியன்ன
உடம்பிடித் தெய்வமிவ்வா
றுநகெழ செலவினோகி
மடம்பிடித்திட்ட வெஞ்சூர்
மாமுதல்தடிந்த தன்றே"

மற்றும் அவன் அருள்பெற்றதை :-

"தீயவை புரிந்தாரேனுங்
குமரவேள்திரு முனூற்றால்
தூயவராகி மேலைத்
தொல்கதி யடைவரென்கை
யாயவும்வேண்டுங் கொல்லோ
வடுசமரிந் நாட்செய்த
மாயையின் மகனுமன்றோ
வரம்பிலாஅருள் பெற்றுய்ந்தான்"

என்று கூறுதல் காண்க. (தொடரும்)

# மாணிக்கவாசக சுவாமிகள் காலம்

[தா. பொன்னம்பலம் பிள்ளை]

(மாஜி கலால் கமிஷனர், திருவாங்கூர்)

சித்தாந்தம் 12-வது இதழில் 'திருவெம்பாவைக் கருத்து' என்ற கட்டுரையில் பத்திராதிபரவர்கள் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்திருப்பதைவாசித்தவர்கள் மிகவும் மகிழ்வுற்றுர்கள். ஓர் இடத்தில் மணிவாசகப் பெருமானுடைய காலத்தைக் குறிக்குங்கால் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பின்னரோ என்பதாக ஒரு சந்தேகம் உற்பவித்ததாய்க் காணப்படுகின்றது. எளியேன் கால் நூற்றுண்டுக்கு முன்னர் சுவாமிகளுடைய காலத்தை நிர்ணயிக்கப் புகுந்ததில், கிறிஸ்தவர்களுடைய சாஸனங்கள் முதலாயவைகளை அடிப்படையாகக் கொண்டு அவரது காலம் கிறிஸ்துவுக்குப் பின்னர் மூன்ருவது நூற்றுண்டில் என்பதாக ஒரு முடிவுக்கு வந்தேன். வாதவூர் புராணத்திற் பெருமான் மலை நாட்டுக்குச் சென்றதாக ஓரிடத்திலும் கூறவில்லை. கிறிஸ்தவர்களுடைய ஏடுகளில் அவர் மலை நாட்டிற்குச் சென்றிருந்ததாகவும், அவ்விடத்தில் அம்மார்க்கம் புகுந்த அநேகரைப் பஞ்சகவ்யத்தைக் கொடுத்துச் சைவத்தில் புகுவித்ததாகவும், அதனைப்பற்றிக் கீழ் குருக்கள்மார் அண்டியோக் (Antioch) முதலான இடங்களிலுள்ள மேலதிகாரிகளாகிய குருக்கள்மாரிடத்தில் கடிதம் மூலமாக "மாணிக்கவாசக னென்பான் ஒருவன் இவ்விடம் வந்திருக்கிறுன். அவன் பசுவின் மலங்களைக் கொடுத்துத் தனது மதத்திற்குத் திருப்புகிறுன்." என்பதாக முறையிட்டதாகவும் காணப்படுவதுமன்றி, 'கைப் புண்ணுக்குக் கண்ணுடி வேண்டாம்' என்ற பழமொழியை அனுசரித்து இன்றும் மணிக்கிராமக்காரார் என்பதாக ஓரினத்தினர் மலையாளத்திலிருக்கின்றனர். இவர்கள் இந்து மதத்தினரா யிருந்தும் மற்றுள்ள இந்துக்களுடன், கொள்வனவும், கொடுப்பனவும், பந்தி போஜன முதலியனவுஞ் செய்வதில்லை. ஆராய்ச்சி செய்ததில் இவர்கள் ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களாயிருந்ததாயும், மணிவாசகப் பெருமானுல் சைவராக்கப்பட்டவர்களென்றும் தெரிந்தது.

மலையாள பாஷையானது, தமிழாகிய தாய் வயிற்றில் பிறந்ததென்பதற்கு ஐயமில்லை. சுருங்கச் சொல்லின் மலையாள நாட்டின் பூர்வகாலத்து மொழி தமிழாயே யிருந்தது. பஞ்ச இலக்கியங்களில், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அவ்விடத்தில்உண்டாயிற்றென்பதற்கு எதிர்வாதமில்லை. திருவாசக நடையும், மேற் குறிக்கப்பட்ட இலக்கியங்களின் நடையும் ஒத்திருக்கின்றன. திருவாசகத்திலிப்போது தமிழ்நாட்டில் வழங்காமலும் மலையாளத்தில் வழங்கிவருகின்றனவுமாகிய சொற்கள் அநேகம் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைத் திருவெம்பாவையினின்றும் எடுத்துக் கூறுகின்றேன் :—

1. வன்செவி :—சாதாரணமாய் யாருக்காவது காது கேட்பதில் குறைவாயிருந்தால் 'உனக்கென்ன வன்செவியோ' என்பது வழக்கம்.

2. புத்தடியோம்:—என்றதொடரில், புதுமையா யிருப்பதற்கு, புத்து, புத்தன் என்பதாக வழங்கி வருகின்றது.

3. நேன்னலே :—என்றபதம் நேற்று என்பதற்கு இன்றும் வழங்கி வருகின்றது.

4. பழஞ்சோல்:—என்னும்தொடரை பழமொழிக்கு உபயோகப் படுத்துகிருர்கள்.

[குறிப்பு :—நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவராகிய உயர் திருவாளர் - பொன்னம்பலம் பிள்ளையவர்கள் இக்கட்டுரையை வரைந்தவியது நமக்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கின்றது. மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு முற்பட்டவர் என்பதும் கி. பி. மூன்ரும் நூற்றுண்டினர் என்பதுமே நமது கொள்கையு மாகும். "திருவெம்பாவைக் கருத்து" என்ற கட்டுரையில் (மலர் ௩-பக்கம் ௨௯௨) "ஒரு தோழன் தொண்டருளன்" என்பதற்கு "ஒப்பற்ற தோழமையோடு தொண்ட ருள்ளத்தே கிலைத்திருப்பவன்" என்ற குறிப்புரை வரைந்து, அம்மட்டில் அமையாது (வாதவூரடிகட்கு முற்பட்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ற கொள்கையுடையோர் இந்த அடி சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறிக்கிறது என்பர்.) என்றும் குறித்திருக்கிரேம். இதிலிருந்து நம்முடைய கொள்கை அதுவல்லவென்றும் மாணிக்கவாசகர் பிற்காலத்தவர் என்போர் கூற்றை நினைவூட்டும் முறையிலேயே மேற்கூறிய குறிப்பு வரையப்பட்டுள்ள தென்பது அக்குறிப்பின் நடையிலிருந்தும், ( ) என்ற குறிகளிலிருந்தும் அறியக் கிடக்குமென்றும் உயர் திருவாளர் - பிள்ளையவர்கட்கும் ஏனைய வாசகர்கட்கும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிரேம்.]

—பத்திராசிரியர்.



# தென்புலத்தார்

[பத்திராசிரியர்]

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ருங் கைம்புலத்தா ரோம்பல் தலை" என்ற திருக்குறளில் கூறப்பட்ட தென்புலத்தார் யார் என்பதைப்பற்றித் தெளிவு காணவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் பல்லாவரம் பொதுநிலைக்கழக விழாவில் நிகழ்த்திய விரிவுரையில் 'ஈண்டு தென்புலத்தார் என்போர் தாய்தந்தையர் முதலிய பிதுர் தேவதைகள்' என்று கூறினதாகவும் அதைமறுத்து தலைமைவகித்த மறைத்திரு - மறைமலையடிகள் 'தென்புலத்தார் பிதுர்தேவதைகளல்லர், இந்தியாவிற்குத் தெற்கேயுள்ள ஒருவகை மக்கட் பகுதியினர்' என்று கூறினதாகவும் திரு. முதலியார் அவர்கள் நமக்குத்தெரிவித்தார்கள். சாதாரணமாகத் தமிழ்நாட்டினர் இதுவரை தென்புலத்தார் என்போரைப் பிதுர் தேவதைகளென்றே கொண்டு அவர்கட்குரிய வழிபாட்டையும் செய்து வருகின்றனர். இந்நிலையில் அடிகள் கருத்து ஒரு வெடிகுண்டுபோல வீழ்ந்திருக்கிறது.

இந்தியாவுக்குத் தெற்கே பல்லாயிரம் மைல்கள்வரை இந்துமகாசமுத்திரமே யிருக்கிறது. தென்துருவத்துக்கருகில் துருவகண்டம் (Antarctic Continent) மனித சஞ்சாரமில்லாத பனிக்கண்டமாயிருக்கிறது. எனவே, இந்தியாவுக்குத் தெற்கே மக்கட் பகுதியினர் எவரும் திருவள்ளுவர் காலத்திலாவது நம் காலத்திலாவது இருந்ததாகவும் இருப்பதாகவும் காணக்கிடைக்கவில்லை. லெமூரியாகண்டம் மறைந்த பிறகே திருவள்ளுவர் குறள் ஏற்பட்டதென்பதில் ஐயமில்லை. எனவே, 'தென்புலத்தார்' என்றசொல் திருவள்ளுவரால் பருவுடல் தாங்கிய உயிருடை மக்கள் எவரையும் சுட்டுவதற்கு உபயோகப்படுத்தப்படவில்லை யென்பது பெற்ரும். ஏனெனில் இந்தியாவின் தென்புலத்தில் அவ்வித மக்கள் எவரும் இலர் என்பதுபற்றியே யாம்.

பின்னைத் 'தென்புலத்தார்' என்பார் தாம் யார்? எட்டுத்திக்குப் பாலகருள் தென்றிசைக்கதிபன் எமதர்ம ராஜன். அவனே உயிர்களை உடல்களினின்றும் பிரித்துக்கொண்டு போய் அவ்வுயிர்களின் நல்வினை தீவினைகட் கேற்பப் பரிசும் தண்டனையும் விதிப்பவன் என்று புராணங்கூறும். எனவே உடல்களினின்றும் பிரிக்கப்பட்ட உயிர்கள் தென்றிசைக்குச் செல்கின்றன என்பது வழக்கு. தென்புலத்தார் என்ற சொல் தென்புறத்தில் எமன் ஆளுகைக்குட்பட்ட உயிர்களைக் குறிப்பதாகக் கொள்வது இயற்கையாகப் பொருள்கொள்ளும் முறையாகும். மற்ருெரு வழியாகவும் பொருள் கொள்ள

இடமுண்டு. தென்புலம் என்பது லெமூரியா கண்டம். அது எவ்வாறு ஒருகாலத்தில் தூலத்தில்காணப்பட்டு பின்னர் மறைந்துபோயிற்றோ அஃதே போல் ஒரு காலத்தில் தூலத்தில் காணப்பட்டுப் பின்னர் இறந்து மறைந்து போனவர்கள் தென்புலத்தை ஒத்தவர்கள் என்ற பொருளில் தென்புலத்தார் எனப்படுவர். இன்னும் வேறொரு வழியிலும் பொருள் கோடல்கூடும். தென்புலம் என்பது மறைந்துபோன லெமூரியா கண்டம். தென்புலத்தார் அக்கண்டத்திலிருந்தவர்களான பழந் தமிழ்மக்கள். ஆகையால் எவ்வாறு பொருள் கொள்ளினும் "தென்புலத்தார்" என்பது இறந்தவர்களையே குறிக்கும் சொல்லாகின்றது.

இனி இறந்தார்க்கு வழிபாடு செய்வது நாகரிகம் மிகுந்த இக்காலத்திலும் அவசியமா என்பதை ஆராய்வாம். ஒரு நாட்டு நாகரிகம் என்பது புத்தகத்தில் கிடைப்பதல்ல; நாடோறும் மக்கள் வாழ்க்கையிற் கிடைப்பதே யாகும். தமிழர் நாகரிகத்தைக் காப்பாற்றுகின்றவர்கள் தமிழ் மக்களே. ஒரு தலைமுறையின் நாகரிகத்தை அதற்கு முந்திய தலைமுறை கொடுத்தாலன்றிப் புதியதாக அந்தத் தலைமுறை உண்டாக்கிக்கொள்ள முடியாது. இது பொதுவிதி. சிறப்பாக ஒவ்வொருவனுடைய அடிப்படையான பழக்க ஒழுக்கங்கள் அவனது தாய் தந்தையர்களால் தரப்பட்டனவே; செப்பஞ் செய்யப்பட்டனவே. பின்னர் அவ்வடிப்படையின் மீது ஒவ்வொருவனும் தனது சொந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொள்கிறான். ஆகையால் ஒவ்வொருவனுடைய நாகரிக அடிப்படையும் அவன் தாய்தந்தையர்களால் அன்புடன் அளிக்கப்பட்ட நன்கொடையேயாகும். அத்தகைய நன்கொடைக்கு ஒவ்வொருவனும் நன்றி செலுத்துவது நாகரிகத்துக் கிசைந்ததேயாம்.

தென்புலத்தாரை எவ்வாறு வழிபடுவது [illegible] முறையில் அபிப்பிராய பேதங்கள் பல இருக்கலாம். சிலர் சிரார்த்தம், தர்ப்பணம் முதலியன செய்யவேண்டுமென்னலாம். வேறு சிலர் ஆரியப் புரோஹிதத்தை நீக்கி ஓதுவார் மூர்த்திகள் புரோஹிதம் வேண்டுமென்னலாம். சிலர் வறிஞர்க்கு உணவு நல்குதலே சிறந்த வழிபாடென்னலாம். அந்த ஆராய்ச்சியில் நாம் ஈடுபட விரும்பவில்லை. எவ்வாறயினும் தாய்தந்தையர் முதலான மூதாதைகள் வழிபாட்டின் சிறப்பும் அவசியமுமே நாம் வற்புறுத்த விரும்புவனவாகும். தென்புலத்தார் வழிபாட்டின் சிறப்பைப்பற்றி இந்த இருபதாவது நூற்றாண்டில் மேல் நாட்டு ஆசிரியர் மக்டூகல் என்பார் கூறுவதை நோக்குக. அதன் துணை கொண்டாவது உண்மை உணர்க.

We may find similar evidence in the history of other peoples of long-continued civilization. It is for this reason that ancestor-worship is so eminently favourable to national stability. In fact, the high civilisations of ancient Greece and Rome rested on a firm basis of this kind until their decline began. The cult of the ancestor has played a similar part in Japan......It is probable that China also owes her immense stability and latent power in large measure to similar causes.

—(*McDougall's Introduction to Social Psychology 20th Edition—1926—page 236.*)

அதாவது மூதாதைகள் வழிபாடு ஒரு நாட்டின் நாகரிகத்தை நிலைநிறுத்துகிறது. கிரீஸ், ரோம், ஜப்பான், சைனு முதலிய தேசங்களில் உயர்ந்த நாகரிகத்துக்கு அடிப்படையாகவும் வலி செய்யும் கருவியாகவும் மூதாதை வழிபாடு இருந்தது. நாம் மேற்கூறினதையே முடிந்த முடிபாகக் கொள்ளாமல், இதைக் கண்ணுறும் அறிஞர் ஒவ்வொருவரும் செவ்வையாய் இப்பொருளையாராய்ந்து தமது முடிபுகளையும் அவைகட்குரிய காரணங்களையும் நமக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

187152

# திருவாசக நுண்மைபயில் கழகக் கூட்டங்கள்

இக்கழகத்தின் இரண்டாவது, மூன்றாவது கூட்டங்கள் முறையே 8-2-1931, 1-3-1931 தேதிகளில் நடைபெற்றன. திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்களே ஆசிரியராக விருந்து கூட்டங்களை நடத்திவைத்தார்கள். இரண்டாவது கூட்டத்தன்று "வான்கெட்டு" என்ற திருத்தெள்ளேணச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு இயற்கைத் தத்துவ நூலுணர்ச்சி ததும்ப, தத்துவங்கள் தோன்றி நின்றழியுமுறையை விளக்கி, அம்முறை மேற்கூறிய செய்யுளில் எவ்வாறு மிகத்திருத்தமாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளதென்றும், மாணிக்கவாசகர் எத்துணை மிகுதியான அநுபவத்தோடும் முதிர்ந்த உணர்ச்சியோடும் எக்களிப்போடும் அப்பாட்டைப் பாடுகிறாரென்றும் திறம்படக்கூறினார்கள். "நான் கெட்டு" என்பதை இறுதியில் வைத்துள்ள சிறப்பை மிக நன்றாக விவரித்தார்கள். மாணிக்கவாசகர் 1600 வருடங்கட்கு முன்னர் எவ்வாறு இவ்வுண்மைகளையெல்லாம் தனது சுவாநுபவங்கொண்டே அறிந்தனர் என்பதை ஆராயும்போது நமக்குண்டாகும் வியப்பையும், அவ்வுண்மைகளை இக்காலத்திய கருவி நூலுணர்ச்சி கொண்டு அறிந்து மகிழும்போது நமக்குண்டாகும் மகிழ்ச்சியையும் ஒருவாறு விளக்கினார்கள்.

மூன்றாவது கூட்டத்தன்று "வானாகி மண்ணாகி" என்ற திருச்சதகச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு "உண்மையுமாய் இன்மையுமாய்" என்ற வாக்கின் சிறப்பை விளக்கி, கடவுள் ஆணையும் சக்தியும் எவ்வாறு பரிபூரணமாய் ஐந்தொழில்களை, மற்றொரு கர்த்தாவும் உண்டோ என்று நோக்குவார் ஐயுறும் வண்ணம் நடத்துகின்றனவென்றும், இதையே மற்றொரு வகையிலுணரும்போது கடவுளை நியதியே நீதியே (O, Law!) என்று விளிப்பதுமாகும் என்றும், இந்தச் செய்யுளில் "ஆகி, ஆகி" என்ற விகுதியின் பொருள் இன்னதென்றும் பலவகையிலும் பல உதாரணங்களோடும் எடுத்து விளக்கினார்கள்.

திருவாசகம் நுண்மைபயில் கழகம், இனி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8½ மணிக்குச் சிந்தாதிரிப்பேட்டை ஹைஸ்கூலில் கூடும். திரு. டி. கே சிதம்பரநாத முதலியார் அவர்கள் உத்தியோகத்தின்பொருட்டு வெளியூர்கட்குச் செல்லுவதால், சில ஞாயிற்றுக்கிழமைகள் வர இயலாமற் போகுமாயின் அப்போது திருவாளர்கள் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், தெ. பொ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை முதலிய பேரறிஞர்கள் இக்கழகத்தைத் தொடர்ச்சியாக நடத்தி வருவார்கள். நான்காவது கூட்டம், அதின் பின்னர் கூடும் கூட்டங்கள் இவைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகள் அடுத்த இதழில் வெளிவரும்.

## சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற சபைகளின் விழாக்கள்

1. திருவல்லிக்கேணி ஸ்ரீ பிரசன்ன விநாயக சரவண பவானந்த சபையின் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக பிப்ரவரி௴ 6௳ முதல் மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மங்கையர் தனிக்கூட்டம் நடைபெற்றது. இரண்டாம் நாள் திரு. E. N. தணிகாசல முதலியார் அவர்களும், மூன்றாம் நாள் திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியார், சம்பந்த முதலியார் முதலிய பல அன்பர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

2. திரிசிராப்பள்ளி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழா பிப்ரவரி௴ 21, 22-ம் தேதிகளில் பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் மிகச் செவ்வையாக நடந்தது. திருவாளர்கள் C. K. சுப்பிரமணிய முதலியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், ஜகவீரபாண்டியனார், அ. மு. சரவண முதலியார், மறை திருநாவுக்கரசு முதலிய பேரறிஞர்கள் அரிய பொருள்கள்பற்றிச் செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## சமாஜ அறிக்கைகள்

1. திருவொற்றியூரில் மகிழடி சேவையன்று திரு. கி. குப்புச்சாமி முதலியார் மகிழடி சேவையின் வரலாற்றைக் கோயிலில் குழுமியிருந்த மக்களுக்குப் பிரசங்கித்தார். சமாஜ உதவித் தலைவர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் இயற்றிய "மகிழடி சேவை" என்ற சமாஜத் துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது.

2. வழக்கம்போல திருமயிலாப்பூரில் பங்குனி மாதத்தில்வரும் திருவிழாவில் சமாஜக் கூட்டங்கள் ஆலயத்திலேயே கூடி சமய போதனை செய்யும். திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியார், அ. சோமசுந்தரம் செட்டியார், திரு. வி. உலகநாத முதலியார், கே. ஆறுமுகம் பிள்ளை, பா. கந்தசிம்ஹம் முதலியோர் சொற்பொழிகள் நிகழ்த்துவார்கள். அனைவரும் வருக.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 3.

# முக்கிய அறிக்கை

சமாஜத்தின் தேவார வெளியீட்டுக் கணக்கை நேர்செய்து முடித்தற்பொருட்டு சமாஜத்தின் வசம் எஞ்சி நிற்கும் தேவாரப் பிரதிகளை மொத்தமாகவோ, பெருங் கூறுகளாகவோ பகிரங்க ஏலத்தில் விற்று முதல் செய்தற்குரிய ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு விற்று முதல் செய்த பிறகு ஐந்து பிரதிகட்குக் குறையாமல் சுந்தரர் தேவாரத்தையும், பத்து பிரதிகட்குக் குறையாமல் அப்பர் தேவாரத்தையும் வாங்க விரும்புவோர் இப்போதுள்ள மொத்த விலை விகிதம் கழிவு விகிதம் முதலிய நன்மைகளைப் பெறமுடியாமற் போகும். ஆகையால் மொத்தமாக வாங்க விரும்புவோர் முன் பணம் அனுப்பி இது முதல் பதினைந்து நாட்களுக்குள் விரைந்து தங்களுக்கு வேண்டிய பிரதிகளை வாங்கிக் கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கிறோம். பகிரங்க ஏலத்தின் காலம், நடைமுறை, நிபந்தனைகள் முதலிய விவரங்கள் அடுத்த இதழிலும் தினசரிப்பத்திரிகைகளிலும் வெளியிடப்படுமென எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.
சைவசித்தாந்த மகா சமாஜம்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-3-1931.

# சமாஜத்தின் சொற்பொழிவாளர்

நந்தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சென்று சொற்பொழிவாற்றி, சமய வளர்ச்சி செய்வதற்கென்றே திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த சைவத் திருவாளர்-பெருஞ் சொற்கொண்டல் E. S. கண்ணபிரான்வேள் அவர்களைச் சமாஜத்தின் சொற்பொழிவாளராக நியமித்திருக்கிறோம். திருப்பாதிரிப்புலியூர், திருக்கூடலையாற்றூர் முதலிய சில தலங்களில் பிப்ரவரி மாதத்தில் இவர் தொண்டு புரிந்தனர். 'சித்தாந்தம்' பத்திரிகைக்குப் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அவர்கள் சந்தாவை வசூலித்து சமாஜத்துக்கனுப்பும் அதிகாரமும் இவருக்குண்டு. சமாஜத்தின் தேவார வெளியீடுகளையும் கிராமவாசிகள் இவரிடத்தில் நேரில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். இவர் மூலம் தொண்டுபெற விரும்புவோர் தங்கள் விருப்பத்தையும், தாங்கள் சமாஜத்துக்கும் இவர் தொண்டுக்கும் செய்யக்கூடிய உதவியையும் விரிவாக நமக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.